

# இலங்கை முதலீட்டுச் சபை

## வருடாந்த அறிக்கை

# 2020

BOI
SRI LANKA




# வருடாந்த அறிக்கை
# 2020

இலங்கை முதலீட்டுச் சபை

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| பணிப்பாளர் நாயகத்தின் வாழ்த்துச் செய்தி | 5 |
| பணிப்பாளர்கள் சபை 2020 | 6 |
| நோக்கு, பணி மற்றும் முக்கிய விழுமியங்கள் | 10 |
| இமுச பக்கத்தோற்றம் | 13 |
| மைல்கற்கள் | 14 |
| விசேட நிகழ்வுகள் | 16 |
| ஒரே பார்வையில் இமுச | 17 |
| உலக முதலீடுகளின் போக்கு | 19 |
| இலங்கையில் முதலீட்டுச் செயலாற்றுகை 2020 - ஒரு சவாலான உலக முதலீட்டுப் போக்கின் மத்தியில் | 20 |
| சமீபத்திய முயற்சிகள் | 23 |
| கொவிட் - 19 உடன் முன்னோக்கிச் செல்கிறோம் | 27 |
| எங்கள் மக்கள் | 30 |
| கூட்டாண்மை சமூகப் பொறுப்பு | 34 |
| நிதி மீளாய்வு - 2020 | 35 |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2020 | 71 |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2020 ஆம் வருட அறிக்கைக்கான இமுச இன் பதில்கள் | 85 |
| கணக்காய்வுக் குழுவின் அறிக்கை | 94 |
| நிறுவன அமைப்பு | 95 |
| 31.12.2020 இல் உள்ளவாறு இமுச இன் சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் | 96 |
| இமுச இன் அலுவலக விபரக்கொத்து | 97 |

# பணிப்பாளர் நாயகத்தின் வாழ்த்துச் செய்தி



2020 ஆம் ஆண்டு, உலகளாவிய ரீதியில் ஒருபோதும் எதிர்பாராததோர் ஆண்டாகும். இடையூறுகள் சாதாரண வாழ்க்கைக்கும், வாணிபத்திற்கும் பொதுவானவையாக ஆகின. நாங்கள் எங்களுடைய பாதையில் எதிர்கொண்ட குழப்பங்களுக்கு முகம்கொடுப்பதற்கு எந்தக் கைநூலுமே கிடையாது. எவ்வாறாயினும், சவால்கள் ஏற்பட்டபோதும் பல சந்தர்ப்பங்களில் அசாதாரண பெறுபேறுகள் கிடைக்கப்பெற்றன. இமுச யும் இதற்கு விதிவிலக்கல்ல. அரசாங்கத்தின் நோக்கு 2025 ஐ அடைந்துகொள்வதற்கு இமுச குழுவினால் மேற்கொள்ளப்பட்ட முன்னேற்ற நடவடிக்கைகள் சிலவற்றிற்கு முக்கியத்துவம் கொடுப்பதற்கு நான் ஆவலாகவுள்ளேன்.

இமுச யும், அதன் அலுவலர்களும் அரசாங்கத்தின் நோக்கு 2025 ஐ அடையும் நோக்கத்துடன் தடையற்ற அர்ப்பணிப்புடனும் ஆர்வத்துடனும் எந்த நேரத்திலும் வேலைசெய்து பாடுபடுவதுடன், 2020 இல் தொடர்ந்தும், முதலீட்டாளர்கள் சமூகத்திற்கு சேவையாற்றினர். தொடர்ந்து முடக்கப்பட்ட நிலை இருந்தபோதும், எம்மைச் சார்ந்த தொழில்முயற்சிகள் நெருக்கடியான காலகட்டம் முழுவதும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வழங்கப்பட்ட எங்களுடைய தொடர்ச்சியான ஆதரவினால், 2020 மே மாதத் தொடக்கம்வரை தேசிய ஏற்றுமதி வழமையான மட்டத்திற்கு திரும்புவதைக் காணக்கூடியதாக இருந்தது. உலகில் என்று இல்லாவிட்டாலும், பிராந்தியத்தில் இலங்கை அவ்வாறு செய்த முதலாவது நாடுகளில் ஒன்றாக இருக்கலாம். அது உள்ளூர் முதலீட்டாளர்களின் நம்பிக்கையை உயர்த்தியதுடன், வாணிபம் செய்வதற்கு இலங்கையின் நீள்மீட்சி மற்றும் பொருந்தும் தன்மை என்பன ஒரு உசிதமான இடமாகக் கவனிக்கப்படுகிறது.

மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டில் இமுச யும் "வளர்ச்சியின் தசாப்தமாக" விபரிக்கப்பட்ட காலமான அடுத்த பத்து ஆண்டுகளின் நாட்டின் பொருளாதார இலட்சியத்திற்கு உறுதியான அடித்தளத்தை தாபிப்பதற்கு இலங்கையின் வெளிநாட்டு நேரடி முதலீட்டு மூலோபாயத்திலும் சிறந்த கவனம் செலுத்துகிறது. கையில் இந்த வழிகாட்டலுடன், இலங்கைக்கு நன்கு வரையறுக்கப்பட்ட வெளிநாட்டு நேரடி முதலீட்டு மூலோபாயத்தை உறுதியாகவும் கொண்டு, முதலீட்டுக்கான முன்னுரிமைத் துறைகளை எங்களால் செதுக்க முடிந்ததுடன், "சுபீட்சம் மற்றும் சிறப்பின் கற்பனைத் தோற்றம்" என்ற அ.மே.ஜனாதிபதியினால் அவருடைய விஞ்ஞாபனத்தில் தெளிவாக்கப்பட்ட அபிலாஷைகளுடன் பொருந்துவதான நாட்டின் பொருளாதார நிலப்பரப்பை ஒரு மூலோபாய மாற்றத்திற்கான நிலையில் வைக்கக்கூடியதாக உள்ளது. அரசாங்கமும் 2021 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் மூலமாக முதலீடுகளுக்கு துறை குறிப்பிடப்பட்ட வரிச் சலுகைகளினால் ஆதரவு தருவதாக உறுதிமொழி அளித்துள்ளது. இதனைப் பூர்த்தி செய்வதற்கு ஒரு எளிமையான வரிக் கட்டமைப்பும், சீரான முதலீட்டுக்கான காலநிலையும் அரசாங்கத்தினால் உறுதியளிக்கப்பட்டுள்ளது. சமூக-அரசியல் ஸ்திரத்தன்மையை ஆதரிக்கின்ற சாதகமான சந்தை வாய்ப்பு, ஒரு ஆதரவான சட்ட மற்றும் ஒழுங்குமுறை கட்டமைப்பினால் மேலும் வலுப்படுத்துவதுடன், முதலீடு, நிதி மற்றும் தொழில் சம்பந்தமான சட்டங்களில் முன்னேற்றமான மாற்றங்களை ஆரம்பிப்பதற்காக திடமான திட்டங்களும் தீட்டப்பட்டுள்ளன.

முறையே மருந்தாக்கப்பொருட்கள் மற்றும் புடவைக் கைத்தொழில்களில் கவனம் செலுத்தி, அம்பாந்தோட்டை மற்றும் ஏறாவூரில் புதிய வலயங்கள் தாபிப்பதற்கு துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது அதிகளவு வேண்டப்படும் உள்ளூர் பெறுமதிசேர் திறனை அதிகரிக்கச் செய்வதுடன், தேசிய இறக்குமதி மாற்று இயக்கத்திற்கும் ஆதரவளிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

நாட்டிற்குள் வெநேமு ஐ மேம்படுத்துவதற்கும், வசதியளிப்பதற்குமான ஆணையுடன் பிரதான முகவரான இமுச தொடர்ந்தும் நாட்டின் முதலீட்டு காலநிலையை மேம்படுத்துவதற்குப் பொறுப்பாக இருப்பதுடன், நாட்டிற்கு நன்மை ஏற்படுத்துவதற்கு பொருளாதார முன்னுரிமைகளுக்கு ஆதரவளிப்பதற்கு வெநேமு ஊடாக வழிவகுக்கிறது. முதலீட்டாளர் சமூகம், பங்குதார முகவர்கள், அரச அதிகார நிறுவனங்கள் என்பவற்றுடன், இமுச குழுவிற்கும் 2020 இல் வழங்கிய சகல ஆதரவுக்குமாக இத் தருணத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2021 இல் ஏராளமான எதிர்பார்ப்புகள் உள்ளன. உங்களுடைய ஆதரவுடனும் எங்களுடைய கூட்டான இயக்கத்துடனும், ஒரு பகிர்ந்துகொள்ளப்பட்ட நோக்கை அடைவதற்கு இமுச முன்னேறி புதிய உயரத்தை அடையும் என்ற நம்பிக்கை எனக்குள்ளது.

# பணிப்பாளர்கள் சபை



திரு சுசந்த ரத்நாயக்க
தலைவர்



டாக்டர் ஹர்ஷா கப்ரல்
சபை அங்கத்தவர்



திரு.சஞ்சய் குலதுங்க
சபை அங்கத்தவர்



டாக்டர் ஹர்ஷா சுபசிங்க
சபை அங்கத்தவர்



திரு ஜயமின் பெல்பொல
சபை அங்கத்தவர்

# பணிப்பாளர் சபையின் பக்கத்தோற்றம்

## 01 திரு சுசந்த ரத்நாயக்க

திரு சுசந்த ரத்நாயக்க 2019 டிஸம்பரில் இலங்கை முதலீட்டுச் சபையின் தலைவராக நியமிக்கப்பட்டார். திரு ரத்நாயக்க கூட்டாண்மைத் துறையில் 40 வருடங்களுக்கு மேலான அனுபவத்தைக் கொண்டுள்ளதுடன், 13 வெவ்வேறு கைத்தொழில் நிறுவனங்களில் பரவியுள்ள 9 வெவ்வேறு நிறுவனங்களின் 46 சபைகளில் இணைந்திருந்தவரென அறியப்பட்டிருந்தார்.

இமுச இல் இணைவதற்கு முன்னர் திரு ரத்நாயக்க ஜோன் கீல்ஜ் ஹோல்டிங்ஸ் பீஎல்சீ, இலங்கை வர்த்தக சம்மேளனம், இலங்கை தேயிலை சபை, இலங்கை தொழில்தருனர் கூட்டவை, மற்றும் சிலோன் ரொபக்கோ கம்பனி பீஎல்சீ என்பன அடங்கலாக எண்ணற்ற முன்னணி மற்றும் மதிப்புடனான இலங்கை கூட்டாண்மை நிறுவனங்களில் தலைவராகச் சேவையாற்றியுள்ளார். 1978 இல் நாட்டின் மிகப் பெரிய சந்தை மூலதனமுடைய நம்பகமான கூட்டாண்மை நிறுவனமான ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸில் இணைந்து 2006 இல் அதன் தலைவர் பதவியைப் பெற்றார். 2013 இல் சிலோன் ரொபக்கோ கம்பனி பீஎல்சீ உடன் இணைந்து கொள்ளும்வரை குழுவின் தலைமைப் பதவியை தொடர்ந்து வகித்துவந்தார். அவரது தலைவர் பதவியைத் தவிர, திரு ரத்நாயக்க ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் (2011 - 2015), வோட்டர் எட்ஜ் (2011) போன்ற அரச அல்லது அரச சார்பான நிறுவனங்களில் பணிப்பாளராகவும், தேசிய பொருளாதார அபிவிருத்தி சபையின் (தேபொஅச) சுற்றுலா, இறையாண்மை, மதிப்பீடு மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு கொத்தணியின் அங்கத்தவராகவும் (2008 இலிருந்து), 2019 இலிருந்து "பொது தொழில்முயற்சிகள், அரச முகவர்கள் மற்றும் அரசுக்குச் சொந்தமான வர்த்தக வியாபாரங்களின் சபைகளுக்கு தகுதியானவர்களை நியமிப்பதற்குச் சிபாரிசு செய்வதற்கான" ஆறு-அங்கத்தவர் கொண்ட தொழிலாளுமை உடையவர்கள் குழுவிற்கு ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட ஒரு அங்கத்தவராகவும் பல்வேறு பதவிகளை வகித்துள்ளார். திரு ரத்நாயக்க கண்டி திரித்துவக் கல்லூரி மற்றும் கொழும்பு 7, றோயல் கல்லூரி ஆகியவற்றில் கல்வி கற்றுள்ளார்.

## 02 ஹர்ஷா கப்ரால் ஜச (P.C)

இலங்கையில் ஜனாதிபதி சட்டத்தரணியான டாக்டர் கப்ரால் கம்பனிச் சட்டம், புலமைச் சொத்துச் சட்டம், வர்த்தகச் சட்டம், பிணைச் சட்டங்கள், சர்வதேச வர்த்தக சட்டம் மற்றும் வர்த்தக நடுத்தீர்ப்புகள் துறைகளில் முப்பத்தி மூன்று வருட அனுபவத்தைக் கொண்டுள்ளார். அவர் பதினாறு (16) வருடங்களாக ஜனாதிபதி சட்டத்தரணியாக இருப்பதுடன், இலங்கையில் வர்த்தக உயர் நீதிமன்றங்கள் மற்றும் மேல் நீதிமன்றங்களில் பரந்த தொழில் திறமையையும் கொண்டிருக்கிறார். அவுஸ்திரேலியா, கன்பரா பல்கலைக் கழகத்திலிருந்து நிறுவன சட்டத்தில் டாக்டர் பட்டத்தையும் பெற்றிருக்கிறார்.

டாக்டர் கப்ரால் பரிஸிலுள்ள இன்ர்நஷனல் சேம்பர் ஒப் கொமர்ஸ் (ICC) இன்ர்நஷனல் கொர்ட் ஒப் ஆர்பிற்றேஷனில் பங்குபற்றும் ஓர் அங்கத்தவராகவும், பெடரேஷன் ஒப் இன்ரிகிரேட்டட் கொன்பிளிக்ற் மனேஜ்மென்ற் (FICM) இல் ஒரு பிரதிநிதித்துவ அங்கத்தவராகவும் இருப்பதுடன், இன்ர்ர்நஷனல் கொமெர்ஷல் டிஸ்பியூற்ஸ் ட்ரிபியூனலிலும் (ICDT) ஒரு பிரதிநிதித்துவ அங்கத்தவராக இருக்கிறார். ஐ.இ. இன்ஸ்ரிரியூற் ஒப் சார்ட்டட் செக்கிறரீஸ்" இல் ஒரு அங்கத்தவருமாவார்.

## 03 சஞ்சய் குலதுங்க

சஞ்சய் குலதுங்க யூனிவஸிற்றி ஒப் சிக்காகோ பூத் ஸ்கூல் ஒப் பிஸினஸிலிருந்து மாஸ்டர் ஒப் பிஸினஸ் அட்மினிஸ்ட்ரேஷன் பட்டம் பெற்றுள்ளார். அவர் ப.நி.ப. (CFA) சார்ட்டர்ட்டும் பெற்றிருக்கிறார்.

ஹொங்கொஹ் ஜார்டின் ப்லமிங்கில் முன்னாள் பிராந்திய பகுப்பாளரான குலதுங்க, அறிவு செயல்முறை அவுற்சோர்ஸிங் நிறுவனமான அம்பா றிசேச் லங்காவின் தாபக பணிப்பாளருமாவார். உற்பத்தி, பொழுதுபோக்கு, மற்றும் நிதி உட்பட பல்வகைப்பட்ட கைத்தொழில் நிறுவனங்களில் பி.நி.அ. (CEO), ஆகவும், நிறைவேற்றுப் பணிப்பாளராகவும் தாபகராகவும் பதவி வகித்துள்ளார்.

அவர் இலங்கை. ப.நி.ப மன்றத்தின் தலைவராகவும், இலங்கை செக்கியூறிற்ரீஸ் அன்ட் எக்ஸ்சேன்ஜ் கொமிஷனில் ஆணையாளராகவும், இலங்கை மத்திய வங்கியில் நிதிப் பிரிவு ஸ்திரத்தன்மை ஆலோசனைக் குழுவிலும் சேவையாற்றியிருக்கிறார்.

## 04 ஹர்ஷா சுபசிங்க

டாக்டர் ஹர்ஷா சுபசிங்க இலங்கை, ஐஇ மற்றும் ஐஅ இல் அமைந்துள்ள கோட்ஜென் குரூப் ஒப் கம்பனிஸின் (GodeGen Group of Companies) தாபகர், தலைவர், பிரதம நிறைவேற்று அதிகாரியுமாவார். பயணம், கல்வி, மோட்டார் வாகனம், போக்குவரத்து வசதி, விவசாயம், சக்தி மற்றும் சுகாதாரப் பராமரிப்பு என பலதுறை கைத்தொழில்களுக்கு புதிதாகக் கண்டுபிடித்த, முழுமையாக அளவிடக்கூடிய தீர்வுகளை வழங்குவதில் இக் கம்பனி பெயர்பெற்றதாகும். ட்ரவல்பொக்ஸ் வெகா (TravelBox Vega), சார்ஜ்நெற் (ChargeNET), ஐகுரோ (AiGROW), க்ளவுட் ஸ்மார்ட் ஸ்கூல் (Cloud Smart School) போன்ற உலகப் பகழ்பெற்ற வியாபாரக் குறியீடுகளுடனானவற்றடன் கோட்ஜென் இலங்கையில் செயற்கை நுண்ணறிவியலில் (Artificial Intelligence) மிகப்பெரிய தனியார் துறை முதலீட்டாளர்களில் ஒன்றாகும். கோட்ஜென்னின் வெட்டும் முனை பொருள் வடிவமைப்பு மற்றும் தீர்வுகளால் இலங்கையை உலக வரைபடத்தில் பல தடவைகள் புகழடையச்செய்த பெருமை டாக்டர் சுபசிங்கவிற்கு உண்டு.

டாக்டர் சுபசிங்க இலங்கையில் புதிதாகக் கண்டுபிடிக்கும் கலாச்சாரத்திற்கு வலுவூட்டுவதில் முக்கிய பங்காற்றி வருவதுடன், பல்கலைக் கழகங்களுடன் செயலாற்றி, உயர் பெறுமதி இநெ (IP) ஐ வழங்குகின்ற உண்மையான உலக திட்டங்களுக்கு வசதியளிக்கும் அதேவேளை, எதிர்கால சந்ததியினர் தொழில்துறைக்குத் தயாராக இருப்பதற்கு அவர்களை உருவாக்கும் ஒரே நோக்கத்துடன், கியூபிற்ஸ் லப்ஸ் (QBITS Labs) என்ற முயற்சியின் கீழ் அரச பல்கலைக்கழகங்களில் பல ஆஅ (R&D) திட்டங்களுக்கு பிரதான அனுசரணையாளராகவும் இருந்திருக்கிறார். மொறட்டுவ பல்கலைக் கழகத்திலுள்ள கியூபிற்ஸ் லப்ஸ் அதன் மாணவர்களுக்கு 3 வருட தொழில் செய்துகொண்டு PhD ஐ வழங்குகிறது.

டாக்டர் சுபசிங்க ட்ரேஸ் எக்ஸ்பேர்ட் சிற்றியை (Trace Expert City) ஆரம்பித்த முக்கியத்தவர்களில் ஒருவரும், உப தலைவருமாவார். இங்கு இலங்கையில் அசாதாரண பொருட்களை கட்டியெழுப்புவதற்கான புதிதாகக் கண்டுபிடிக்கும் துறையிலுள்ள மிகவும் திறமையான பணியாளர்களுக்காக நட்புச் சுற்றுப்புறச் சூழலும், வசதிகளுடனுமான உலகத் தரம்வாய்ந்த வேலைத் தலங்களைக் கட்டுவதற்கு ட்ரேஸ் இலங்கை நஅஅ (UDA) உடனான நீண்ட காலத் திட்டத்திற்கு தலைமை தாங்கியுள்ளது. ஷர்ஹா தற்போது இலங்கை இமுச சபையிலும் இருக்கிறார்.

டாக்டர் சுபசிங்கவின் கல்வி ஆய்வுகள் செயற்கை நுண்ணறிவு மற்றும் மென்பொருள் முகவர்கள் ஆய்வில் டாக்டர் (PhD), தகவல் தொழில்நுட்பத்தில் முதுகலை மற்றும் ஐக்கிய இராச்சியத்திலிருந்து மின் மற்றும் மின்னணு கணனி பொறியியல் பட்டதாரி என்பவற்றை உள்ளடக்கியுள்ளது.

## 05 ஜயமின் பெல்பொல

திரு பெல்பொலவிற்கு கொல்ட்மன் சச்சே (ஐ.இ.) (Goldman Sache (UK)) மற்றும் ஐ.அ.நா. நோமுரா (Nomura) உட்பட சர்வதேச முதலீட்டு வங்கியியல் மற்றும் சொத்து முகாமைத்துவம் என்பவற்றில் 10 வருடங்களுக்கு மேலான அனுபவம் உள்ளது. அவர் வோல் ஸ்றீர்ரில் (Wall Street) புதிதாக உண்டாக்கும் திறமைக்கும், அதி உயர் விளைவைக் கொடுக்கும் முதலீட்டு மூலோபாயத்திற்கும் அடையாளம் காணப்பட்ட ஒரு குழுவான கோல்ட்மன் சச்சியில் விரும்பத்தக்க பிரின்ஸ பல் ஸ்ரரஜீஸ் (Principal Strategies) குழுவில் பணிபுரிந்த ஒரேயொரு இலங்கையருமாவார். திரு பெல்பொல அவருடைய தொழிலில் பல்வேறு துறைகளிலும், நாடுகளிலும் ஐஅடொ 20 பில்லியனுக்கும் கூடுதலான பெறுமதிவாய்ந்த சர்வதேச முதலீடுகளைக் கட்டமைத்து, முகாமைத்துவம் செய்துள்ளார்.

திரு பெல்பொல ஒரு மூத்த ஆலோசகராக ஐஅ. வங்கிகள் மற்றும் சர்வதேச மத்திய வங்கிகளில் வங்கியியல் துறை மறுசீரமைப்புக்கு ஆலோசனையும் வழங்கியுள்ளார். விசேடமாக கட்டுப்பாட்டாளர்களுக்கும் அமெரிக்க வங்கியில் பணிப்பாளர் சபைக்கும், டீபிஎஸ் (DBS), வெல்ஸ் பார்கோ (wells Fargo) மற்றும் டொய்ச் வங்கி (Deutsche Bank) ஆகியவற்றிற்கு போதுமான மூலதனம் பற்றிய தீர்மானங்கள், மறுமூலதனங்கள், வங்கியியலில் டிஜிற்றல் புதிய கண்டுபிடிப்புகளின் பிரயோகம் பற்றியும் ஆலோசனை வழங்கியுள்ளார்.

தனது நிதித்துறை அனுபவத்தைக் கட்டியெழுப்பி, திரு பெல்பொல நிதிசார் தொழில்நுட்பம் (fintech) என்ற பரப்பில் ஒரு முதலீட்டாளராகவும், தொழில் முயற்சியாளராகவும் பிரவேசித்தார். அவர் தனது தொழில்முயற்சியின் பயணத்தை பாரம்பரியமற்ற சொத்துக்களை மதிப்பிடுவதற்கான ஒரு தனியுரிமை மாதிரியை அபிவிருத்தி செய்து, அதனை ஒரு லோஸ் ஸ்ரீற் வங்கிக்கு விற்பனைசெய்து ஆரம்பித்தார்.

தொழில்நுட்பத்தையும், தரவு அறிவினையும் நிதிசார் துறையில் பிரயோகிப்பதில் ஆசியாவில் ஒரு மிகச் சிறந்த நிதிசார் தொழில்நுட்ப தொடக்கமாக அண்மையில் அடையாளம் காணப்பட்ட ஒரு கம்பனியான மணிவேக்ஸ் ரெக்னோலஜிர்ஸின் தாபக தலைவராகவும் ஜயமின் இருந்தார்.

தற்போது அவர் ஜயாரு ட்ரேட் பாட்னர்ஸின் (Jayaru Trade Partners) தலைவராகவும், சிலோன் ஈகோ ஸ்பைசஸின் (Ceylon Eco Spices) சபை பணிப்பாளராகவும் சேவையாற்றுகிறார். ஜயாரு ட்ரேட் பாட்னர்ஸ் உலகளாவிய வாணிபப்பொருட்கள் சந்தைக்கு உட்கட்டமைப்பு, நிதியியல் மற்றும் செயற்பாட்டு சேவைகளை வழங்குகிறது. சிலோன் ஈகோ ஸ்பைசஸ் நிறுவனம் நீடித்த விவசாயப் பொருட்களை ஏற்றுமதி செய்து, 10 சர்வதேச சந்தைகளுக்கு மேலாக சேவைசெய்யும் முன்னணி இலங்கை ஏற்றுமதியாளராகும்.

திரு பெல்பொல பிஸினஸ் அட்மினிஷ்ரேஷனில் (MBA) முதுகலைமானிப் பட்டத்தை ஹவாட் பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றார். அவர் தனது சாட்டரை (Charter) ஐஅ சீஎப்ஏ நிறுவனத்திலிருந்தும், (CFA Institute, USA), (UK) CIMA (UK) வையும் பெற்றுள்ளார். திரு பெல்பொல 20 வயதில் உலகில் CIMA முகாமைத்துவ கணக்காளராகிய மிகவும் இளைய வயதினராவார். அந் நாட்களில் CIMA பரிசை வென்ற இளவயதினர் இவராவார். அவர் CIM (யூகே) இலிருந்து பட்டப்படிப்புக்கு பின்னரான டிப்ளோமாவையும் பெற்றிருந்தார்.

# எங்கள் நோக்கு

*"ஆசியாவின் நிலையான முதலீடுகளுக்காக அதிசிறந்த கவர்ச்சிமிக்க கேந்திர நிலையமாக இலங்கையை மாற்றியமைத்தல்"*






# எங்கள் பணி

*“இலங்கைக்கு தரமான முதலீட்டினைக் கவர்ந்தீர்ப்பதற்கும், அதனைத் தக்க வைப்பதற்கும் உள்ள சாத்திய தன்மையை நிறைவேற்றுவதற்காக மேம்படுத்தப்பட்ட ஏற்றுமதி அடிப்படையொன்றுக்கு இட்டுச் செல்வதற்கும், மிகச்சிறந்த தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதற்கும், புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் புத்தாக்கம் என்பவற்றினூடாக அறிவையும், திறன்களையும் மேம்படுத்துவதற்கும், இலங்கை முதலீட்டுச் சபை நேர்மறையாகவும், வேகமாகவும் செயலாற்றுகின்றது.”*

# முக்கிய விழுமியங்கள்

## செயல்திறன் மற்றும் சாதனைக்கான ஆர்வம்:

இமுச ஆனது மேன்மையடைய விரும்புகின்றதான ஆனால் யதார்த்தமான முதலீடு மற்றும் வேலைவாய்ப்புகளை உருவாக்குகின்ற இலக்குகளை அடையும்.

## பொது மற்றும் தனியார் கோளங்களைக் கட்டுப்படுத்துதல்:

எங்களுடைய பொருளாதாரத்தை செழிப்படையச் செய்வதற்கு உதவும் முதலீடுகளை எளிதாக்கி, பாதுகாத்து வளர்ப்பதில் இமுச பெருமை கொள்ளும். நாங்கள் பொது மற்றும் தனியார் நிறுவனங்களுடன் ஒத்துழைத்து, பங்குதாரராக அவர்களின் பணிக்குப் பங்களிப்பு செய்யும் அதேவேளை எங்களுடைய பணியையும் வழங்குவோம்.

## ஒருமைப்பாடு மற்றும் தொழில்முறை:

முதலீட்டாளர்களின் தேவைகளை விளங்கி, சரியான நேரத்தில் வர்த்தக மற்றும் புதுமையான தீர்வுகளை வழங்குவதில் இமுச அர்ப்பணம் செய்யும். நாங்கள் ஒருமைப்பாடு, நேர்மை, நாணயம், நம்பகத்தன்மை, நம்பிக்கை, நியாயமாக நடத்துதல், மரியாதை மற்றும் அக்கறை என்பவற்றை இதயபூர்வமான அர்ப்பணிப்பில் கொண்டிருப்போம்.

## உயர்ந்த வாடிக்கையாளர் சேவை:

வெளிநாட்டு நேரடி முதலீட்டு அமைவிடங்களுக்கு எதிராக செயற்படும் மற்றும் கணிசமான சிறந்த நிலைகள்

## மக்கள்:

திறன், ஒத்துழைப்பு, அர்ப்பணிப்பு மற்றும் அதன் மக்களின் சிறப்பிற்குப் பொறுப்பாக இருத்தல் என்பவற்றிற்கு இமுச மதிப்பளிக்கும். பதவியினர் பணியாற்றுவதற்கும், விருத்தி செய்துகொள்வதற்கும், வெற்றியடைவதற்கும் இமுச யை ஒரு சிறந்த இடமாக ஆக்குவதில் நாங்கள் தொடர்ந்து கவனம் செலுத்துவோம்.

# இமுச பக்கத்தோற்றம்

1978 இல் தாபிக்கப்பட்டு, முதலீட்டாளர்களுக்கும், வியாபாரங்களுக்கும் முதலீட்டு மேம்பாடு, கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் ஆதரவான சேவைகளை இலகுவில் அணுகுவதற்கு ஒரு கேந்திர புள்ளியாக தொழிற்படும் ஆணையுடன் இலங்கை முதலீட்டுச் சபை தேசிய முதலீட்டு மேம்பாட்டு முகவராக செயற்படுகிறது.

இலங்கையில் பொருளாதார அபிவிருத்தியை இயக்கும் கேந்திர நிறுவனமாக அடையாளம் காணப்பட்டு, இலங்கை முதலீட்டுச் சபை திறமையான, முக்கிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதல், ஏற்றுமதியை ஏற்படுத்துதல் மற்றும் நாட்டின் முதலீட்டு சூழ்நிலையை உயர்த்துதல் என்பவற்றின் மூலம் நிலையான பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களித்து வெளிநாட்டு நேரடி முதலீட்டை கவர்கின்றது.

## தேவை

வெளிநாட்டு முதலீட்டை இயக்குவதுடன், பலன்தரக்கூடிய முதலீட்டு சூழ்நிலையை உருவாக்குவதற்கு தேசிய பொருளாதார கொள்கைகளை அமுல்படுத்துவதன் மூலம் தேசத்திற்கு சேவை செய்வதே இமுச இன் தேவையாகும். ஏற்றுமதி வருமானத்தை உருவாக்கி, சர்வதேச முதலீட்டுக்காகத் தேடப்பட்ட இடமாக இலங்கையை வெளிப்படுத்துவதற்கும் நிலையான வெளிநாட்டு முதலீட்டை அடைவதற்கும் அது மிகவும் பிரயத்தனம் செய்கிறது.

## நோக்கங்கள்

இமுச இன் முக்கிய நோக்கங்கள் வருவனவற்றில் கவனம் செலுத்துகிறது: போஷாக்களிப்பதுடன், பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துதல், பொருளாதாரத்தின் அடித்தளத்தை விஸ்தரித்து, பலப்படுத்துதல், வெளிநாட்டு நேரடி முதலீட்டை ஊக்கப்படுத்தி, மேம்படுத்துதல், வெளிநாட்டு நாணய சம்பாத்தியத்திற்கான மூலங்களைப் பலவகைப்படுத்துதலுடன் ஏற்றுமதி சம்பாத்தியங்களை அதிகரித்தல் மற்றும் குடியரசிற்குள் கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சிகளை நிறுவுவதுடன், அபிவிருத்தி செய்தலையும் ஊக்குவிப்பதுடன், போஷாக்களிப்பதுமாகும்.

## பங்களிப்பு

- முன்னுரிமை துறைகளை **இலக்கு வைத்து முதலீடுகளைக் கவர்வதற்கு** அரசாங்கத்தின் முதலீட்டு கொள்கைகளை அமுல் படுத்துவதற்கு உதவி செய்து, வெநேமு இன் மட்டத்தைப் படிப்படியாக அதிகரிக்கச்செய்து, தேசிய வளர்ச்சி இலக்கினை அடைவதற்குப் பங்களித்தல்
- இலங்கையில் உயர் பெறுமதிசேர்/உயர் தொழில்நுட்ப உற்பத்தி, உயர் பெறுமதிசேர் ஆடை, த.தொ. (IT) செயல்படுத்தப்பட்ட சேவைகள், சுற்றுலாத்துறை, உணவு பதனிடுதல், ஏற்பாட்டியல், கல்வி மற்றும் பாரிய அளவிலான உட்கட்டமைப்பு அல்லது ஏனைய தெரிவு செய்யப்பட்ட துறைகளில் கருத் திட்டங்களை ஆரம்பிக்க உத்தேசிக்கும் **முதலீட்டாளர்கள் தொடர்பை ஏற்படுத்திக்கொள்ளும் முதலாவது புள்ளியாக** இமுச தொழிற்படுகிறது. முதலீட்டாளர்களுக்கு வசதிகளை வழங்குவதற்காக தகவலும், வழிகாட்டுதலும் வழங்கப்படுவதுடன், ஏனைய நிரல் நிறுவனங்களிடமிருந்து வேண்டப்படும் ஒப்புதல்களும் இமுச இனால் ஒருங்கிணைக்கப்படுகிறது.
- கருத்திட்ட முன்மொழிவுகளை அங்கீகரிப்பதற்காக அந்தந்தத் துறை முதலீட்டு விண்ணப்பங்கள் **இமுச இனால் மதிப்பீடு செய்யப்பட்டு**, சலுகைகள் வழங்கி, வெளிநாட்டவர்களுக்கு விசா வழங்குவது எளிதாக்கப்படுகிறது.
- கருத்திட்டத்தை ஆரம்பித்தது முதல் அதனை அமுல்படுத்தி, கருத்திட்டத்தின் வெற்றிகரமான செயற்பாட்டிற்கு இறக்குமதி/ஏற்றுமதியை எளிதாக்கி, கவனித்தல், மூலதனப் பொருட்கள் மற்றும் மூலப் பொருட்களின் இறக்குமதியை அனுமதித்தல் மற்றும் முடிவுப் பொருட்களின் ஏற்றுமதி என்பவற்றிற்கு **இமுச முதலீட்டாளர்களுக்கு கருத்திட்ட காலம் முழுவதும் உதவி வழங்கிவருகிறது.**
- இமுச குறைந்தளவு காலப்பகுதிக்குள் கருத்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக முதலீட்டாளர்களுக்குப் பொருத்தமான தளங்களில் உடனடியாகக் கிடைக்கக்கூடியவாறு வழங்குவதற்காக உட்கட்டமைப்பு வசதிகளுடன் **ஏற்றுமதி செயலாக்க வலயங்களை அபிவிருத்திசெய்து வருகிறது.**

# மைல் கற்கள்

## 1978

1978 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் கீழ் கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு (கொ.பெ.பொ.ஆ.) தாபிக்கப்பட்டது.

## 1979

1979 ஆம் ஆண்டு கட்டுநாயக்க ஏற்றுமதி செயலாக்க வலயம் தாபித்தல். இதுவே இன்று வரை பராமரிக்கப்பட வேண்டியதும், முதலாவதும், பெரியதுமான வலயமாகும்.

## 1986

வலய தொழில்முயற்சிகளுக்கு உதவுவதற்காக கொ.பெ. பொ.ஆ. இனால் ஒரு தொழில் வங்கி அமைக்கப்பட்டது.
1986 இல் இமுச இன் இரண்டாவது வலயமாக பியகம ஏற்றுமதி செயலாக்க வலயம் தாபித்தல்

## 1990

வெளிநாட்டு முதலீட்டு ஆலோசனைக் குழு, கொ.பெ.பொ.ஆ. என்பன ஒன்றாக இணைக்கப்பட்டு, கொ.பெ.பொ.ஆ. இலங்கையில் வெளிநாட்டு முதலீட்டை அங்கீகரிக்கும் ஏக அதிகார சபையாக ஆகியது.

## 1991

தென் மாகாணத்தை அபிவிருத்தி செய்வதற்காக கொக்கல ஏற்றுமதி செயலாக்க வலயம் தாபித்தல்.

## 1992

1992 ஆம் ஆண்டின் சட்ட இல. 49 இன் கீழ் இலங்கை முதலீட்டுச் சபை (இமுச) ஒரு நியதிச்சட்ட நிறுவனமாக இணைக்கப்பட்டது. இமுச கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவின் (கொ.பெ.பொ.ஆ.) வாரிசாகும்.
அரச பிராந்திய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வேலையில்லாமையைக் குறைப்பதற்காக "200 தைத்த ஆடைகள் கைத்தொழில் நிகழ்ச்சி" அறிமுகப்படுத்தப்பட்டது.

## 1995

கண்டி கைத்தொழில் பூங்கா தாபித்தல்.

## 1998

முதலீட்டுச் சபை, உட்கட்டமைப்பு முதலீட்டுப் பணியகத்துடன் (உமுப (BII) ஒன்றிணைக்கப்பட்டது.
மீரிகம ஏ.செ.வ. உம், மல்வத்த ஏ.செ.பூ உம் தாபித்தல்

## 1999

ஹொரண ஏ.செ.வ. உம், வத்துபிற்றிவல ஏ.செ.வ. உம் தாபித்தல்

## 2000

பொல்காவெல ஏ.செ.வ., மாவத்தகம ஏ.செ.வ. மற்றும் மிரிஜாவில ஏ.செ.வ. என்பன தாபித்தல்

## 2001

சீத்தாவக வலயம் இலங்கை முதலீட்டுச் சபையின் சீத்தாவக ஏ.செ.வ. ஆக சுவீகரிக்கப்பட்டது.

## 2006

கைத்தொழில் துறையை கிராமப்புறத்திற்குக் கொண்டு-செல்லும் நோக்கத்துடன், "300 தொழில்முயற்சிகள் திட்டம்" ஆரம்பிக்கப்பட்டது.

## 2008

உவமை இன் 09 தளங்களைக் கொள்வனவு செய்து, இமுச இன் தலைமையகம் உலக வர்த்தக மையத்தில் நிரந்தரமாக தாபிக்கப்பட்டது.

## 2009

இமுச ISO 9001:2000 ஐப் பெற்ற முதலாவது அரச நிறுவனமாகும்.
இமுச யாழ்ப்பாண அலுவலகம் நிறுவப்பட்டது.

## 2011

ஐ.அ.டொ.1 பிலி. வெ.நே.மு. இலக்கு எட்டப்பட்டது.

## 2013

“பொதுநலவாய அரச தலைவர்களின் கூட்டம் (CHOGM) 2013” இற்குச் சமாந்தரமாக நடைபெற்ற “பொதுநலவாய வர்த்தக மன்றத்தின்” பிரதம ஒருங்கிணைப்பாளர் இமுச ஆகும்.

## 2014

இமுச “ஆசிய பசுபிக் வர்த்தக மன்றம் 2014” க்கு அனுசரணை வழங்கியது.

## 2017

இமுச இன் 40 வது ஆண்டு விழா

## 2018

அதிஉயர் வெ.நே.மு ஐ.அ.டொ. 2.37 பிலி. பெறப்பட்டது.

## 2019

பிங்கிரிய ஏசெவ: இமுச இன் ஏற்றுமதி செயலாக்க வலயங்களுடன் புதிதாக சேர்த்துக்கொள்ளப்பட்டது.

## 2020

ஏறாவூரிலும், அரபொக்கவிலுமாக இரண்டு புதிய வலயங்களின் அபிவிருத்தி ஆரம்பிக்கப்பட்டது

# விசேட நிகழ்வுகள் 2020

**ஐஅடொ. 2.3 பிலி.** பெறுமதியான **144** முதலீடுகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது.
(26 புதிய திட்டங்களும், 52 தபாஉ திட்டங்களின் விரிவாக்கம் அடங்கலாக 118 விரிவாக்கங்கள்)

சீஎச்ஈசீ (CHEC) துறைமுக நகரத்தில் கொழும்பு சர்வதேச நிதி திட்டங்களுக்கு **ஐஅடொ 1,000 மிலி.** ஒப்புதல் வழங்கப்பட்டது. பாரிய அளவிலான இறப்பர் உற்பத்தி திட்டம் ஒன்றுக்கு **ஐஅடொ 300 மிலி.** முதலீட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது..



தொற்றுநோய் நிலைமை இருந்தபோதிலும் **ஐஅடொ 687 மிலி.** வெநேமு உட்பாய்ச்சலும், **ஐஅடொ 716 மிலி.** உள்ளூர் முதலீடும்


வணிகப்பொருள் மற்றும் சேவைகள் ஏற்றுமதிகளின் **ஐஅடொ 7 பிலி.** (தேசிய ஏற்றுமதிகளின் 66% உம், தேசிய கைத்தொழில் ஏற்றுமதிகளின் 85% உம்)



பிரத்தியேகமாக மருந்தாக்கம் மற்றும் புடவை உற்பத்திக்கு **2 எ.செ.வ கள்** அபிவிருத்தி செய்யப்பட்டு வருகிறது.

# ஒரே பார்வையில் இமுச

## வெளிநாட்டு நேரடி முதலீடு உட்பாய்ச்சல் (ஐஅடொ மிலி.)




**1978-2020 காலப்பகுதியில் மொத்த வெநேமு உட்பாய்ச்சல் ஐ.அ. டொ. 19 பிலி.**

***அம்பாந்தோட்டை இன்ர்ந'னல் போர்ட் குரூப் (தனி) லிமிடட் இற்காக 2017 இல் பெற்றுக்கொண்ட ஐஅடொ 292.1 மிலி. மற்றும் 2018 இல் பெற்றுக்கொண்ட ஐஅடொ 827.6 மிலி. அடங்கலாக**

## பொருளாதார தாக்கம்



தேசிய ஏற்றுமதிகளின் 66%

தேசிய கைத்தொழில் ஏற்றுமதிகளின் 85%

தேசிய தைத்த ஆடைகள் மற்றும் புடவை ஏற்றுமதிகளின் 97%

மொத்த தொழிலாளர் படைகளின் 6%

***>1,600***
*இமுச இன் கீழ் செயற்பட்டுக்கொண்டிருக்கும் நிறுவனங்கள்*

***>500,000***
*திரண்ட நேரடி வேலைவாய்ப்பு*

***டொ 19 பிலி***
*(1978-2020 ) காலப்பகுதியில் வெநேமு உட்பாய்ச்சல்*

***டொ 7-8 பிலி***
*வருடாந்த வாணிபப்பொருட்கள் மற்றும் சேவைகள் ஏற்றுமதி*

***13***
*செயற்பட்டுக்கொண்டிருக்கும் ஏற்றுமதி செயலாக்க வலயங்கள்*

***1***
*அபிவிருத்தி செய்யப்பட்டு வருகிறது (பிங்கிரிய ஏ.செ.வ)*


***2***
*மருந்தாக்கம் மற்றும் புடவை உற்பத்திக்காக பிரத்தியேகமாக வரவிருக்கும் ஏற்றுமதி செயலாக்க வலயங்கள்*


மூலம்: இமுச மற்றும் மத்திய வங்கி

## வெநேமு துறைவாரியான பங்களிப்பு


## முதற் 10 வெநேமு ஆதார நாடுகள்

2011-2020 காலத்தில் ஐஅடொ 13 பிலி. வெ.நே.மு உட்பாய்ச்சல்




## ஏற்றுமதி செயலாக்க வலயங்கள் (ஏசெவ கள்)




**13 ஏசெவ கள்** செயற்பட்டுக்கொண்டிருக்கின்றன
+
**1 ஏசெவ** அபிவிருத்தி செய்யப்படுகிறது
(பிங்கிரிய ஏசெவ)

**>265** நிறுவனங்கள் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றன
**>130,000** வேலைவாய்ப்பு
**>ஐஅடொ 3 பிலி** வருடாந்த ஏற்றுமதிகள் வருமானம்

**2 வரவிருக்கும் ஏசெவ கள்**
பிரத்தியேகமாக மருந்தாக்கம் மற்றும் புடவை உற்பத்திக்காக
(அம்பாந்தோட்டை மற்றும் ஏறாவூர் ஏசெவ)


# உலக முதலீடுகளின் போக்கு 2020

டிஸம்பர் 2019 இல் புதிய கொரோனா வைரஸ் திடீரெனத் தோன்றிப் பரவியதனாலும், மார்ச் 2020 அளவில் உலகளாவிய தொற்றுநோயாக அதனைப் பிரகடனப்படுத்தியதாலும் உலகளாவிய வெளிநாட்டு நேரடி முதலீடு அடுத்துவரும் ஆண்டுகளில் கடுமையான விளைவுகளைச் சந்திக்கும் என்று நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்டது. சூட்சுமமாக அறிந்ததுபோன்று உலகளாவிய வெநேமு 2019 இல் ஐஅடொ 1.5 திரிலியனிலிருந்து மதிப்பிடப்பட்ட தொகையான ஐஅடொ 859 பிலியனாக வீழ்ச்சியடைந்து, 2020 இல் 42% இனால் கடுமையாகச் சரிந்தது. இது 2009 உலகளாவிய நிதி நெருக்கடியைத் தொடர்ந்த அக்கறைக்குரிய முதலீட்டு சரிவின் 30% குறைவாகும்.

அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கிடையில் செங்குத்தான சரிவு 69% ஆன வீழ்ச்சியுடன், மதிப்பிடப்பட்ட பெறுமதியான ஐஅடொ 229 பிலியனாக இருந்த அதேவேளை, அபிவிருத்தியடையும் நாடுகள் ஐஅடொ 616 பிலியன் மதிப்பீட்டுடன் 12% இணையான சரிவை அனுபவம் செய்தன. அபிவிருத்தியடையும் ஆசியா மிகக் குறைந்தளவு சரிவாக 4% ஐயும், லத்தீன் அமெரிக்கா 37% சரிவாக பாரிய வீழ்ச்சியையும், அனுபவம் செய்ததுடன், ஏனைய அபிவிருத்தியடையும் பிராந்தியங்கள் முழுவதிலும் வெநேமு இன் சரிவு சமமின்றி இருந்தன. ஐரோப்பாவிற்கான வெநேமு உட்பாய்ச்சல் மூன்றில் இரண்டாகச் சரிந்து, எதிர்மறையான ஆதிக்க எல்லைக்குள் (- ஐஅடொ 4 பிலியன்) சரிவடைந்துள்ளதுடன், ஐக்கிய இராச்சியத்திற்கான பாய்ச்சல் பூஜியமாக வீழ்ந்த அதேவேளை, ஐக்கிய நாட்டு உட்பாய்ச்சல்கள் 50% இற்கு மேலாகக் குறைந்தது.

கொவிட் 19 தொற்றுநோய் சகலவிதமான முதலீடுகளையும் பாதித்தது: கிறீன்பீல்ட் முதலீட்டுத் திட்ட அறிவிப்புகள் (-35%), க்ரொஸ்-போர்டர் எம் அன்ட் எஸ் (-10%) மற்றும் புதிய சர்வதேச திட்ட நிதி ஒப்பந்தங்கள் (-2%).

**2019 மற்றும் 2020 இல் பிராந்திய ரீதியாக வெநேமு உட்பாய்ச்சல்கள்**




மூலம்: UNCTAD இன்வெஸ்ற்மென்ற் ட்ரெண்ட்ஸ் மொனிற்றர், இதழ் 38, 24 ஜனவரி 2021

எவ்வாறாயினும், அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளால் உலகளாவிய வெநேமு உட்பாய்ச்சலின் 72% பங்கினைப் பாதுகாக்க முடிந்தது. சீனா தொற்றுநோயின் ஆரம்பகாலத்தில் மூலதன செலவில் பின்னடைவைச் சந்தித்தபோதும், ஐஅடொ 163 பிலியன் வெநேமு உட்பாய்ச்சலைக் கவர்ந்து, அதிகளவான வெநேமு ஐப் பெற்றுக்கொண்ட நாடாகியது. அதேவேளை கிழக்கு ஆசியாவே உலகளாவிய வெநேமு க்கு அதிக எண்ணிக்கையான பிராந்தியமாக இருந்து, உலகளாவிய வெநேமு இன் மூன்றில் ஒன்றாகக் கணக்கிடப்பட்டதுடன், இந்தியா டிஸிற்றல் துறையில் அதிகளவான முதலீட்டினால் 13% வெநேமு அதிகரிப்பைப் பயனாகப் பெற்றுள்ளது. தென்கிழக்கு ஆசியாவில் வெநேமு 30% ஆக நலிந்து, ஐஅடொ 107 பிலி. ஆகியபோதும், தெற்கு ஆசியாவில் வெநேமு 10% இனால் உயர்ந்து, ஐஅடொ 65 பிலியனாகியது.

# இலங்கையில் முதலீட்டுச் செயலாற்றுகை 2020
## ஒரு சவாலான முதலீட்டுப் போக்கின் மத்தியில்

### 2020 இல் திட்ட செயலாற்றுகை

மதிப்பிடப்பட்ட முதலீடு (ஐஅடொ மிலி)

| | வகை | திட்டங்களின் எண்ணிக்கை | வெளிநாடு | உள்ளூர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| ஒப்புதல் வழங்கப்பட்ட திட்டங்கள் | புதியவை | 26 | 1,462 | 64 | 2,302 |
| | விரிவாக்கம் | 118 | 192 | 584 | |
| திட்ட ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டவை | புதியவை | 29 | 650 | 557 | 1,660 |
| | விரிவாக்கம் | 93 | 91 | 555 | |
| அமுல்படுத்தப்பட்ட திட்டங்கள் | புதியவை | 28 | 51 | 241 | 783 |
| | விரிவாக்கம் | 49 | 82 | 409 | |
| வர்த்தகத்தை ஆரம்பித்த திட்டங்கள் | புதியவை | 13 | 13 | 180 | 536 |
| | விரிவாக்கம் | 39 | 131 | 212 | |

*குறிப்பு: மார்ச் 2021 இல் இரத்துச் செய்யப்பட்டவை தவிர*

### 2020 இல் ஒப்புதல் வழங்கப்பட்ட திட்டங்களின் முன்னேற்றம்


| ஒப்புதல் வழங்கப்பட்டவை | ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டவை | அமுல்படுத்தப்பட்டவை | வர்த்தகம் ஆரம்பிக்கப்பட்டவை |
|---|---|---|---|
| ஐஅடொ 2,302 மிலி (26 புதிய திட்டங்கள் 118 விரிவாக்கங்கள்) | ஐஅடொ 1,027 மிலி (15 புதிய திட்டங்கள் 78 விரிவாக்கங்கள்) | ஐஅடொ 433 மிலி (8 புதிய திட்டங்கள் 26 விரிவாக்கங்கள்) | ஐஅடொ 100 மிலி (1 புதிய திட்டம் 18 விரிவாக்கங்கள்) |

*குறிப்பு: 2021 மார்ச் இல் முன்னேற்றம்*


### 2020 இல் வெநேமு உட்பாய்ச்சல்

2020 ஆம் ஆண்டு இலங்கையில் பதியப்பட்ட வெநேமு தொகை ஐஅடொ 687 மிலி ஆகும். 2020 இல் கிடைக்கப்பெற்ற மொத்த வெநேமு இல் ஆதன அபிவிருத்தித் துறை அதி உயர்ந்த வெநேமு (37%) ஐப் பெற்றுக்கொண்டதுடன், உற்பத்தித் துறை (28%)ஐயும், தொலைத்தொடர்புத் துறை (17%) ஐயும், ஹோட்டல் துறை (10%) ஐயும், ததொ மற்றும் வெசெவெ (IT &BPO) துறை (4%) போன்றவை அதனைத் தொடர்ந்துமாகும்.

#### வெநேமு துறைவாரியான பங்களிப்பு





#### முதற்10 வெநேமு ஆதார நாடுகள்




## இமுச தொழில்முயற்சிகளின் ஏற்றுமதிகள்

2020 ஆம் ஆண்டு இமுச தொழில்முயற்சிகளின் மொத்த ஏற்றுமதிகள் ஐஅடொ 7,119 மிலி. ஆகப் பதிவுசெய்யப்பட்டுள்ளதுடன், அது தேசிய ஏற்றுமதியின் 66% உம், தேசிய கைத்தொழில் ஏற்றுமதியின் 85% உம் ஆகும். இமுச தொழில்முயற்சிகளின் மொத்த ஏற்றுமதிகளில் 60% தைத்த ஆடைகள் மற்றும் புடவைத் துறையிலிருந்தான அதேவேளை, 12% இறப்பர் துறையிலிருந்தும்,, 5% உணவு மற்றும் பானங்களிலிருந்தும், 3% மி மற்றும் மி (E&E) துறையிலிருந்துமாகும். சேவைகள் துறை இமுச தொழில்முயற்சிகளின் மொத்த ஏற்றுமதிகளில் 8% பங்களித்துள்ளது.




## கொவிட் - 19 மீட்பு - வாணிப பொருட்கள் ஏற்றுமதி 2019 எதிர் 2020



## 2020 ல் முக்கிய துறைகள்

### இறப்பர் துறை



ஏற்றுமதி சந்தைக்காக ஐஅடொ 300 மிலி திட்டமிட்ட முதலீட்டுடன் ரயர் உற்பத்தி செய்யும் திட்டத்தை அமைப்பதற்காக உலகின் முன்னணி சீன இறப்பர் உற்பத்தியாளராகிய சன்டொங் ஹொஆஹுஆ ரயர் கொம் லிமிடட் (Shandong Haohua Tire Co.Ltd) உடன், இமுச ஒரு ஒப்பந்தம் கைச்சாத்திட்டுள்ளது. இந்தக் குறிப்பிடத்தக்க உந்துதலுடனான முதலீடு, ஏற்றுமதி சந்தைகளுக்கு புதிய வழிகளை உருவாக்கும் அதேவேளை நாட்டின் இறப்பர் தொழில்துறைக்கு புத்துயிர் அளிக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

### ஆதன அபிவிருத்தி



சீஎச்ஈசீ (CHEC) துறைமுக நகரத்தில் ஒரு நிதி மையத்தை அமைப்பதற்கு சீனாவிடமிருந்து ஐஅடொ 1 பிலி பெறுமதியான முதலீட்டை இமுச அனுமதித்துள்ளது.

ஐஅடொ 222 மிலி (பெலானா லங்கா பிறைவேற் லிமிடட், ஒரு உள்ளூர் முதலீடு), ஐஅடொ 200 மிலி (பெரீனியல் றியல் எஸ்ரேற், சிங்கப்பூர் ஸ்ரீலங்கா கூட்டு முயற்சி) மற்றும் ஐஅடொ 60 மிலி (பெய்லி இன்வெஸ்ற்மென்ற்ஸ் லங்கா பிறைவேற் லிமிடட் 100% சீனா மற்றும் ஹொங்கொங்கிடமிருந்து வெளிநாட்டு முதலீடு) எனப் பெறுமதியான மூன்று பாரிய அளவிலான கலப்பு அபிவிருத்தித் திட்டங்களை அமைப்பதற்கு இமுச ஒப்பந்தங்கள் கைச்சாத்திட்டுள்ளன.

### மருந்தாக்கம்



லாப் லைப் சயன்ஸஸ் (தனியார்) லிமிடட் மற்றும் சினேர்ஜி பாமசூற்றிக்கல் கோ லிமிடட் மற்றும் சான்ட்ஸ் அக்ரிவ் (தனியார்) லிமிடட் என்பன 2020 இல் கட்டுமானத்தைத் தொடங்கின. இந்தத் திட்டங்களின் திட்டமிட்ட முதலீடுகள் முறையே ஐஅடொ 23 மிலி, ஐஅடொ 16 மிலி மற்றும் ஐஅடொ 10 மிலி ஆகும்.

### ஆடை



ஐஅடொ 155 மிலி பெறுமதியான முதலீட்டுடனான 52 ஏற்கெனவே இருக்கின்ற நிறுவனங்கள் தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்களை (PPE) உற்பத்தி செய்து அவற்றின் உற்பத்தியை விரிவாக்கங்கள் செய்வதற்கு இமுச அனுமதி வழங்கியுள்ளது.

திட்டமிட்ட முதலீடாக ஐஅடொ 9 மிலி ஐ ஏற்றுமதி சந்தைக்கு தைத்த ஆடைகளைத் தயாரிப்பதற்கு ஒரு சீன முதலீட்டாளருடன் (டொங்சியா இன்டஸ்றியல் லங்கா தனியார் லிமிடட்) இமுச ஒப்பந்தம் கைச்சாத்திட்டுள்ளது.

### ததொதொ



திட்டமிட்ட முதலீடான ஐஅடொ 10 மிலி உடன் இலங்கையில் ஒரு ததொ திட்டத்தை அமைப்பதற்கு ஒரு முன்னணி முதலீட்டாளரான எச்சீஎல் ரெக்னோலொஜிஸ் உடன் இமுச ஒரு ஒப்பந்தம் கைச்சாத்திட்டுள்ளது. பயிற்சி வசதிகள் வழங்கும் அதேவேளை ததொதொ துறையில் கிட்டத்தட்ட 2,500 வேலைவாய்ப்பை ஏற்படுத்துவதற்கு எச்சீஎல் (HCL) எதிர்பார்க்கிறது.

### தொலைத் தொடர்புகள்



டயலக் அக்ஸயாற்றா பீஎல்சீ உம் டயலக் ப்றோட்பான்ட் நெற்வேர்க்ஸ் (பிறைவேற்) லிமிடட் உம் ஐஅடொ 250 மிலி பெறுமதியான விரிவாக்கத்திற்கு இமுச உடன் ஒப்பந்தம் கைச்சாத்திட்டுள்ளன. இரண்டு திட்டங்களும் ஏற்கெனவே செயற்படுத்தப்பட்டுள்ளன.


பார்தி எயர்ரெல் லங்கா (தனியார்) லிமிடட் ஐஅடொ 25 மிலி பெறுமதியான விரிவாக்கத்திற்கு இமுச உடன் ஒப்பந்தம் கைச்சாத்திட்டுள்ளதுடன் திட்டம் ஏற்கெனவே செயற்படுத்தப்பட்டுள்ளது.

# சமீபத்திய முயற்சிகள்

## இமுச புதிய மூலோபாயம்: "இலங்கையில் வெநேமு மறுபரிசீலித்தல்"

இலங்கையில் ஒரு தசாப்த வளர்ச்சியை ஏற்படுத்துவதற்காக "இலங்கையில் வெநேமு மறுபரிசீலித்தல்" என்ற கருப்பொருளில் புதிய மூலோபாயத்தை இமுச விருத்திசெய்துள்ளது. இதில் முதலீட்டு ஈர்ப்பு முன்னுரிமைகள் மற்றும் நோக்கங்கள் என்பன யதார்த்தமான கால வரையறைக்குள் தெளிவாக விபரிக்கப்பட்டுள்ளன. புதிய மூலோபாயம் பொருளாதார நிலப்பரப்பை மாற்றுவதுடன் உகந்த முதலீட்டுச் சூழலை உருவாக்குவதையும் குறிக்கோளாகக் கொண்டுள்ளதுடன், நாட்டின் உள்ளார்ந்த மற்றும் போட்டி அனுகூலங்கள் பற்றிய ஆழமான ஆய்வின் அடிப்படையிலும், பிராந்திய போட்டியாளர் செயல்திறன் மீதான ஒப்பீட்டு ஆய்வின்படியும் விருத்தி செய்யப்பட்டது. ஒரு கட்டாய முதலீட்டு சூழல் மற்றும் முதலீட்டாளர் வசதிகளை ஏற்படுத்துவதுடன், குறைபாடுகளை நிவர்த்திசெய்வதற்கு நடவடிக்கைப் பொருட்களை ஏற்படுத்துவதற்கும், முன்னேற்றத்திற்கான முக்கிய பகுதிகள் அடையாளம் காணப்பட்டன. சேவைகளை அணுகுவதைச் சீராக்கும்பொருட்டு செயல்முறைகளை நெறிப்படுத்துவதற்கு, விசேடமாக டிஜிற்றல் ஆக்குவதன் மூலம், அனுமதியளிப்பதற்கான படிமுறைகள் மற்றும் எடுக்கப்படும் நேரம் என்பவற்றைக் குறைத்து, பொருத்தமான துறை அமைச்சுகள் மற்றும் ஏனைய அரச முகவர்களை ஈடுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இரண்டு பிரதான அம்சங்களில் கவனம் செலுத்துகின்ற புதிய மூலோபாய ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ளது. "நாட்டின் கவர்ச்சி" மற்றும் "இமுச மறுபரிசீலித்தல்". இந்த இரண்டு அம்சங்களும் 7 தூண் அணுகுமுறையினால் விவரிக்கப்பட்டது. "நாட்டின் கவர்ச்சி" என்ற அம்சம் கட்டாய முதலீட்டுச் சூழல், இலக்குவைத்த முதலீட்டைக் கவர்தல் மற்றும் இறுதிவரை முதலீட்டாளர் வசதி வழங்கல் என்பவற்றை உள்ளடக்கிய அதேவேளை "இமுச மறுபரிசீலித்தல்" ஆனது அமைப்புமுறை மற்றும் மக்கள், தொழில்நுட்பத்தையும், மக்களையும் ஏற்றுக்கொள்ளல், முக்கிய பொது மற்றும் தனியார் பங்குதாரார்களுடன் கூட்டு மற்றும் செயலாக்கக் கண்காணிப்பு மற்றும் திட்ட முகாமைத்துவ அலுவலகம் என்பன அடங்கலாகும்.




விரிவான மூலோபாயமானது இலக்கு சார்ந்த வெளிநாட்டு நேரடி முதலீடுகளை (FDIs) ஒரு கட்டமைக்கப்பட்ட அணுகுமுறையுடன் கவருவதோடு, பொருளாதார வளர்ச்சியைத் தூண்டுவதுடன் முன்னுரிமை துறைகளில் கவனம் செலுத்துகிறது.

புதிய மூலோபாயம் ஐந்து பரந்த துறைகளை முன்னுரிமைப்படுத்தியுள்ளது.:

| | | |
|---|---|---|
| உற்பத்தி | : | மின்னணுவியல் மற்றும் மின், ஆடை மற்றும் மருந்தாக்கத்தின் மதிப்புக் கூட்டலை விரிவாக்கல் |
| ததொதொ | : | மென்பொருள் அபிவிருத்தி, வாசெமு/ஞாசெமு (BPM/KPM) ததொ பயிற்சி/கல்வி மற்றும் வெளியாகும் தொழில்நுட்பங்கள் |
| விருந்தோம்பல் மற்றும் சுற்றுலா | : | கூஉமக (MICE) சுற்றுலா, சாகச சுற்றுலா, ஆரோக்கியம் மற்றும் சூழல் சுற்றுலா |
| விவசாயம் மற்றும் உணவு பதனிடுதல் | : | இறப்பர், விவசாய/பதனிடப்பட்ட உணவுகள் மற்றும் மீன்பிடி |
| கட்டுமானம், உட்கட்டடைப்பு மற்றும் தளவாடங்கள் | : | விரைவான பிரயாணம், துறைமுகங்கள், விமான நிலையங்கள் மற்றும் தளவாடங்கள் உட்கட்டமைப்பு |

ததொதொ, விருந்தோம்பல் மற்றும் சுற்றுலாத்துறைகள் என்பன “விளையாட்டு மாற்றிகளாக” அடையாளம் காணப்பட்ட அதேவேளை, விவசாயம் மற்றும் உணவு பதனிடுதல் துறை என்பன புதிய சாலை வரைபடத்தில் விரைவான மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்டுவருவதற்கான திறவுகோல் ஆகும். அடையாளம் காணப்பட்ட ஏனைய உயர் திறனான உப துறைகளாவன:

- மருந்தாக்க உப துறை, உயிர் மருந்தியல், ஊசிபோடக்கூடியவை, API மென்பொருள்கள், ஊட்டச்சத்து மருந்துகள் போன்றவை
- மின்னணுவியல் மற்றும் மின் உப துறை: கிறபைற் மற்றும் கிறபீன் அடிப்படையிலான உற்பத்தி, சென்ஸர்களும், ஆழிகளும், ஐஓரீ (IOT) சாதனங்கள், அச்சிட்ட சுற்று பலகைகள் (PCBs). மின் மையப்பலகை மற்றும் கைத்தொலைபேசிகள் போன்றவை
- வளர்ந்துவரும் நுகர்வோர் பொருளாதாரத்தை ஆதரிப்பதற்கும், உற்பத்தி மற்றும் சேவைகள் துறைகளை விரிவாக்குவதற்கும் தேவையான உட்கட்டமைப்பு மற்றும் தளவாடங்கள்

புதிய சாலை வரைபடம் கட்டமைக்கப்பட்ட முதலீட்டாளர் தொடர்பு, நிகழ்ச்சி முகாமைத்துவம், மேம்பட்ட முதலீட்டாளர் வசதி, பின்னரான கவனிப்பு என்பவற்றை சீர்திருத்தத்திற்கான பகுதிகளாக அடையாளம் காணப்பட்ட அதேவேளை, முதலீட்டு கொள்கைகளில் வெளிப்படைத்தன்மையும், ஒரேசீராக இருப்பதுவும் முதலீடுகளை இலக்குவைப்பதற்கு செயல் மற்றும் கட்டமைக்கப்பட்ட அணுகுமுறை என்பன முக்கிய கூறுகளாக அடையாளம் காணப்பட்டன. இமுச, பங்குதாரர்களை நேரடியாக அணுகுவதைப் பூர்த்தி செய்வதற்கு ஏற்கெனவே உள்ள மற்றும் வர்த்தக நோக்கங்களில் நெம்புகோல், நாட்டிற்குள் பல இடங்களில் கூட்டங்கள் மற்றும் விஜயங்களை மேற்கொள்ளுதல், வெளிநாட்டவர் மற்றும் புலம்பெயர்ந்தோர் வலைப்பின்னல்கள், வர்த்தக முகவர்கள் மற்றும் தூதரகங்கள் போன்றவை அடங்கலாக பல்வேறு முக்கிய வழிகளை அடையாளம் கண்டுள்ளது. எதிர்வரும் ஆண்டில் நாட்டைப் பற்றிய அபிப்பிராயத்தை மேம்படுத்துவதுடன், முதலீடுகளுக்கு இலங்கையை ஒரு சிறந்த இடமாக நிலைநாட்டுவதற்கு அதன் முயற்சிகளில் ஆதரவு அளிப்பதற்கு ஒரு அடுக்கு -1 உலகளாவிய ஆலோசனை நிறுவனம் மற்றும் ஒரு சர்வதேச பொது உறவுகள் முகவரின் சேவைகளை ஈடுபடுத்தி, ஒருங்கிணைப்பதுடன், கவனமும் செலுத்தி பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்வதையும் இமுச நோக்கமாகக் கொண்டுள்ளது.

## வெநேமு ஐ இயக்குவதற்கு ஐந்து முன்னுரிமைத் துறைகள் மீதான மூலோபாய அணுகுமுறை

| உற்பத்தி | ததொதொ | விருந்தோம்பல் மற்றும் சுற்றுலா | விவசாயம் மற்றும் உணவு பதனிடுதல் | நிர்மாணித்தல், உட்கட்டமைப்பு மற்றும் தளவாடங்கள் |
|---|---|---|---|---|
| • மருந்தாக்கம்<br>• உயர் மதிப்பு சேர் ஆடை<br>• மின்னணுவியல் மற்றும் மின் | • மென்பொருள் அபிவிருத்தி, வாசெமு/ஞாசெமு, ததொ பயிற்சி/கல்வி மற்றும் வெளியாகும் தொழில்நுட்பங்கள் | • விவ/சூழ சுற்றுலா<br>• சாகசம்<br>• திகிலூட்டும் சாகசம்<br>• ஆடம்பர ஹோட்டல்கள்<br>• கூஉகபொ (MICE) சுற்றுலா | • இறப்பர்<br>• விவ/ பதனிடப்-பட்ட உணவு<br>• மீன்பிடி | • விரைவான பிரயாணம் துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் |
| | | | | |
| பலமான பல முகவர் கூட்டாண்மை-களை தாபித்தல் | • இலங்கைத் தூதரகங்கள் மூலம் சாத்தியமான முதலீட்டாளர்களை திறம்பட ஈடுபடுத்தும்பொருட்டு வெளிவிவகார அமைச்சு இமுச உடன் ஒத்துழைக்கிறது.<br>• அடையாளம் காணப்பட்ட துறைகள் முழுவதிலும் (CCC, ICC, FCCISL, ECCSL, JAAF, SAEA, SLASSCOM) சாத்தியமான முதலீட்டாளர்களுடன் நேரடித் தொடர்புகளுக்கு இமுச வர்த்தக சம்மேளன வலைப்பின்னலுடன் நெம்புகோலாகிறது.<br>• வர்ததக சம்மேளன வலைப்பின்னல்களை விரிவாக்கி, அதன்மூலம் சாத்தியமான முதலீட்டாளர்களை (JICA, JETRO, KOTRA,AHK, UNIDO, Citi Bank, MUFG, Deutsche Bank, ADB, World Bank) அணுகுவதற்காக இமுச இன் உலகளாவிய பங்குதாரர்கள் நாட்டில் தகவல் மற்றும் தரவுத்தளங்களை அணுகக்கூடியதாக்கியுள்ளது | | |
| | | | | |
| புதிய வலயங்கள் அபிவிருத்தி ஆரம்பிக்கப்-பட்டுள்ளது | • புடவை உற்பத்தியில் உள்ளூர் திறனை கட்டியெழுப்புவதன் மூலம் ஆடைத் துறை மதிப்புச் சங்கிலியை ஏறாவூர் புடவை உற்பத்தி வலயம் ஆழமாக்கவுள்ளது.<br>• மருந்தாக்க உற்பத்தி வலயம் இறக்குமதி மாற்று மூலமாக் மருந்தாக்க இறக்குமதிப் பட்டியலைக் குறைக்கும் அதேவேளை செங்குத்தாக ஒரு புதிய ஏற்றுமதித் தொழிற்சாலையைக் கட்டவுள்ளது. | | | |
| | | | | |
| கட்டாய முதலீட்டுச் சூழலை உருவாக்குதல் | • முதலீட்டாளர்களுக்கு முற்கணிப்பை உறுதிசெய்வதற்கு வரிக் கொள்கை நிலைத்தன்மை உத்தரவாதமளிக்கப்படுகிறது.<br>• இமுச இனால் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்களில் உள்ள ஏற்பாடுகள் நிர்ணயிக்கப்பட்ட காலம்வரை மாற்றப்படாது இருப்பதற்கான உத்தரவாதமளிப்பதற்கு இமுச சட்டம் திருத்தப்படுகிறது.<br>• சக நாடுகளுடன் போட்டியிடுவதற்கு கவனமாக வடிவமைக்கப்பட்ட துறை குறிப்பிட்ட வரிச்சலுகைகள் அறிமுகம்<br>• நாட்டிற்குள் வேண்டியளவு திறமையான மட்டத்தினைப் பெறக்கூடியதாக தொழில் பயிற்சி நிறுவனங்களுடன் ஒத்துழைத்துத் தொழிற்படுதல்<br>• 2021 இன் முற்பாதி அளவில் உள்ளூர் திறமைகளுக்கு இடையூறு இல்லாது ஒரு கட்டமைக்கப்பட்ட விசா நிகழ்வை நிறுவுதல்இ<br>• தொழில் நெகிழ்வுத்தன்மை வழங்குவதற்காக தொழிலாளர் சட்டத்தை மறுபரிசீலனை செய்தல் | | | |

படித்த மற்றும் திறமையான பணியாளர்களை உறுதிசெய்வது கட்டாய முதலீட்டு சூழலை உறுதிசெய்வதற்கான இன்னோர் முக்கிய காரணியாகும். தற்போது உருவாகிக்கொண்டிருக்கும் கைத்தொழில்களுக்கு சிறப்புப் பணியாளர்கள் இல்லாமை, விசேடமாக ததொதொ துறையில் ஒரு பெரிய பிரச்சனையாகும். இமுச இன்படி அரச பல்கலைக் கழகங்கள் ஆண்டுதோறும் 26,000 பட்டதாரிகளை உருவாக்குவதுடன், 15,000 பட்டதாரிகளை தனியார் பல்கலைக் கழகங்களும் வெளிவாரி பட்டதாரி நிகழ்ச்சிகளும் உருவாக்குகின்றன.

மறுபுறம், உள்ள தொழில் பயிற்சி நிறுவனங்கள் 130,000 மாணவர்களுக்கு ஏற்பாடுகள் செய்கின்றன. எவ்வாறாயினும் தற்போது, பல்வேறு உற்பத்தித் துறைகள் முழுவதிலும் ஏற்பட்டுவரும் தொழில்நுட்ப திறனுக்கான தேவையுடன் சேர்ந்த பாரிய திறன் தேவையும், வழங்கல் இடைவெளியும் உள்ளது.

முக்கிய துறைகளில் பயின்று வெளிவருகின்ற பட்டதாரிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதுடன், ஏனைய பட்டதாரிகளின் திறனை மேம்படுத்துதல் மற்றும் பயிற்சிகள் மூலமும் பணியாளர்களுக்கான தடையைக் குறைக்கமுடியுமென இமுச நம்புகிறது. இடைப்பட்ட காலத்தில் ததொதொ பட்டதாரிகளின் உள்ள எண்ணிக்கையிலிருந்து 25,000 ஆகவும், பொறியியல் மற்றும் விஞ்ஞான பட்டதாரிகளின் எண்ணிக்கையை 10,000 ஆகவும், விவசாய பட்டதாரிகளை 1,000 வரைக்கும், இரசாயன பட்டதாரிகளை 500 வரைக்கும், முகாமைத்துவ பட்டதாரிகளை 6,000 இலிருந்து 10,000 ஆகவும் அதிகரிப்பதும் விரும்பப்படுகின்ற இலக்காகும்.

சிறப்பு பகுதிகளில், விசேடமாக ததொதொ மற்றும் பொறியியல் துறைகளில் நிகழ்ச்சிகளை வழங்கும் பல்வேறு மேலதிக பல்கலைக் கழகங்களைக் குறைந்த பட்சம் தாபிப்பதன் மூலமும், அரச பல்கலைக் கழகங்களிலிருந்து வெளிவரும் பட்டதாரிகளை அதிகரிப்பதன் மூலமும் இதனை அடைய முடியும். தொழில் பயிற்சி நிறுவனங்களிலிருந்து சித்தியடைந்து வெளிவரும் மாணவர்களின் எண்ணிக்கையை 1.5 மடங்கு அதிகரித்து மீள் பயிற்சி வழங்குவதும் இன்னோர் பரிந்துரையாகும்.

## 2020 இல் ஆரம்பிக்கப்பட்ட புதிய ஏற்றுமதி செயலாக்க வலயங்களின் அபிவிருத்தி

### *(i) மருந்தாக்க வலயம் - அம்பாந்தோட்டை*

பொதுமக்களுக்கு தரமான மருந்துகளை உள்ளூர் வழங்கலினால் வழங்குவதன் மூலமும், ஏற்றுமதிகள் மூலம் அந்நிய செலாவணியை சம்பாதிப்பதன் மூலமும் இலங்கைக்கு அளவிடமுடியாத பொருளாதார மற்றும் சமூக நன்மைகளை ஏற்படுத்தமுடியுமெனவும் மருந்தாக்க தொழிற்சாலை ஒரு சாத்தியமான தொழிற்சாலையாக அடையாளம் காணப்பட்டதன் விளைவாக உலகப்புகழ் வாய்ந்த முதலீட்டாளர்களைக் கவரும் பொருட்டு ஒரு கலைநிலை மருந்தாக்க வலயம் மூலோபாய அபிவிருத்தித் திட்டமாக (மூஅதி) ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

உத்தேசிக்கப்பட்ட மருந்தாக்க வலயம் இரண்டு நிலைகளில் 400 ஏக்கர் பகுதி ஒன்றில் ஒரு மூஅதி திட்டமாக அம்பாந்தோட்டை மாவட்டத்திற்குள் அரபொக்க இமுச வலயத்தில் நிறுவப்படும். திட்டத்தின் முதல் கட்டமாக 20 மருந்தாக்க நிறுவனங்களுக்கு இடம்கொடுப்பதற்கு 200 ஏக்கர் நிலம் அபிவிருத்தி செய்யப்படும் அதேவேளை இரண்டாவது கட்டத்தில் எஞ்சிய 200 ஏக்கர்களில் 20 மருந்தாக்க உற்பத்தி நிறுவனங்கள் நிறுவப்படும். வலய தொழில்முயற்சிகளின் நிர்மாணம் 2021 இன் முதல் காலாண்டு இறுதியில் ஆரம்பிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதுடன், 2021 இறுதியில் 1வது கட்ட உட்கட்டமைப்பு தயார்நிலையில் இருப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளதுடன் உற்பத்திகள் 2024 அளவில் சந்தைக்கு விடப்படும்.

### *(ii) புடவை வலயம் ஏறாவூர்*

உள்ளூர் மற்றும் சர்வதேச சந்தைகளுக்கு வழங்குவதற்கு ஒரு துணி உற்பத்திப் பூங்காவாக 300 ஏக்கர் விஸ்தீரணமுள்ள காணி ஒன்றில் கைத்தொழில் வலயம் ஏறாவூரில் தாபிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மூலோபாய அபிவிருத்தித் திட்டமாக அறிவிக்கப்படவுள்ள இந்த வலயமும் துணிகளை இறக்குமதி செய்வதால் ஏற்படும் அந்நிய செலாவணி வெளியேற்றத்தைக் குறைத்து, ஒப்பீட்டளவில் குறைந்த செலவில் சரியான வேளையில் மூலப் பொருட்களை சரியான தருணத்தில் மேம்பட்ட வேகத்தில் வழங்கி நாட்டிற்கும், ஆடைத் தொழிற்சாலைக்கும் மிகப்பெரிய சந்தர்ப்பத்தை வழங்கும். தோற்ற விதிகளுக்கு அமைய இது இருதரப்பு மற்றும் ஒருதலைப்பட்ச ஒப்பந்தங்கள் (EU GSP+, ISFTA, SLPFTA) மூலம் ஆடை உற்பத்தியாளர்களை சலுகைகளுக்குத் தகுதியுடையவர்களாக ஆகுவதற்கு வழிவகுக்கும். இந்த செயற்பாட்டை வேகப்படுத்தி, 2021 ஆம் ஆண்டில் வலய செயற்பாடுகளை ஆரம்பிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளதுடன், இதுவரை மூன்று நான்கு முதலீட்டாளர்கள் ஏறாவூர் வலயத்தில் துணி ஆலைகளை நிறுவுவதற்கு தங்களுடைய ஆர்வத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். .

# கொவிட் 19 உடன் முன்னோக்கி செல்கிறோம்

கொவிட்-19 தொடர்ந்து உலகம் முழுவதிலும் வேகமாகப் பரவிவருவதால் இமுச எங்களுடைய முதலீட்டாளர் சமூகத்திற்குத் தடையாகவுள்ள விளைவுகளைக் குறைப்பதற்கான உடனடி நடவடிக்கை எடுக்கும்பொருட்டு தொடர்ந்து மாறுவதுடன், உருவாகுகின்ற உலகப் பொருளாதாரம் மற்றும் வர்த்தக சந்தையை உன்னிப்பாகக் கவனித்து வருகிறது. மாறிவரும் பொருளாதார நிலப்பரப்புக்கு ஏற்ப அன்றாட வாழ்க்கையை மாற்றியமைக்கும் அதேவேளை, இமுச தொழில்முயற்சிகளையும், பணியாளர்களையும் சம்பந்தப்பட்ட சமூகத்தினரையும் முடிந்தளவு பாதுகாப்பாக வைத்திருப்பதற்கு எடுக்கவேண்டிய சிறந்த நடவடிக்கையைத் தீர்மானிப்பதற்காக பரவலாக முதலீட்டாளர் சமூகத்துடன் ஆலோசனை நடத்திவருகிறது. இதனை அடைவதற்கு இமுச ஏனைய பங்குதார நிறுவனங்களின் சிறந்த நடைமுறை ஆலோசனைகளுடனும், சுகாதார மற்றும் பாதுகாப்பு நிபுணர்களின் வழிகாட்டல்களையும் பெற்றுப் பயனடைந்தது.

❖ **இமுச வலயங்களின் தொடர்ச்சியான செயற்பாடுகளை உறுதிசெய்தல்**

நாட்டில் அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தி, நாடு முழுவதிலும் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்த போதும் இமுச இன் வலய தொழில்முயற்சிகள் கொவிட்-19 தொற்றுநோய்க்கு மத்தியிலும் தங்கள் வர்த்தக செயற்பாடுகளை மீள ஆரம்பித்து, இடைவிடாத உற்பத்தியைத் தொடர்வதற்கான தங்களுடைய தேவையைத் தெரிவித்தன. ஆகவே இமுச ஆனது வலய தொழில்முயற்சிகளுக்கு வசதியளிப்பது என்பதால். தொற்றுநோய்க்கு மத்தியில் அவர்கள் தங்களுடைய செயற்பாடுகளை ஆரம்பித்து, தொடர்வதற்கு உதவும்பொருட்டு. தொடர்புடைய அதிகாரிகளிடமிருந்து தேவையான அனுமதியைப் பெற்று கீழ்குறிப்பிட்ட பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது.

- **வளாகங்கள் பொருத்தமானவையா என்பதை உறுதிசெய்தல்**

  இமுச,ஆனது தொழில்முயற்சிகள் தமது செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்ட வழிகாட்டல்களுக்கு அமைய வளாகங்கள் தகுதியானவை என்பதை உறுதிசெய்வதற்கான பரிசோதனைகளை நடத்துவதற்கு பொது சுகாதார பரிசோதகர்களின் (PHI) உதவியைப் பெற்றுக்கொண்டது. பொசுப (PHI) அலுவலர்களின் சிபாரிசுக்கு அமைய தொழில்முயற்சிகள் எந்த நேரத்திலும் குறைந்தளவு பணியாளர் படைக்கு அனுமதி அளிப்பதுடன், ஒவ்வொரு தொழில்முயற்சியும் தேவையான சகல சுகாதார வசதிகளை ஒழுங்கு செய்வது உறுதிசெய்யப்பட்டது.

- **ஊரடங்கு உள்ள நேரத்தில் உபயோகிக்கும் அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்கு சிபாரிசு வழங்கல்**

  வலய தொழில்முயற்சிகளின் ஊழியர்களை அவர்களின் வதிவிடம் மற்றும் வேலைத்தலத்திற்குமிடையே அணிதிரட்டுவதற்கு ஊழியர்களுக்கும் வாகனங்களுக்கும் பொலிஸிடமிருந்து ஊரடங்கு உள்ள நேரத்தில் உபயோகிக்கும் அனுமதிப்பத்திரத்தைப் பெறக்கூடியதாக இமுச சிபாரிசுகளை வழங்கும் நடவடிக்கையை ஆரம்பித்தது. பல தொழில்முயற்சிகள் தொழில் அமைச்சரின் தலைமையிலான முத்தரப்பு பணிக்குழு கேட்டுக்கொண்டபடி தொற்றுநோய் காலத்தில் சம்பளம் வழங்கி, தங்களுடைய பணியாளர்களை சேவையில் அமர்த்தியிருந்த அதேவேளை சில தொழில்முயற்சிகள் ஊழியர்களை வீட்டிலிருந்து வேலை செய்வதற்கு அனுமதித்தன.

- **இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செயலாக்கங்களை உறுதிப்படுத்தல்**

  இமுச தொழில்முயற்சிகள் அனைத்தும் சுகாதார ஒழுங்குமுறைகளையும். செயற்பாட்டு வழிகாட்டல்களையும் பின்பற்றுவதற்கான உதவிகளை வழங்கிவரும் அதேவேளை அவர்களுடைய இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செயலாக்கங்களுக்கு வசதியளிப்பதற்குத் தொடர்ந்து தங்குதடையின்றி சேவைகளை வழங்கிவருகிறது. இமுச, தொழில்முயற்சி முகாமைத்துவத்திற்கும், சுகாதார அதிகாரிகளுக்கும், தொழில் திணைக்கள உத்தியோகத்தர்கள்

மற்றும் பொலிசாருக்குமிடையே தொடர் பேச்சுவார்த்தைகளை ஒழுங்குசெய்தது. அதில் தொற்றுநோய் பரவலாக இருக்கின்ற காலத்தில் எந்த இடையூறுமின்றித் தங்களுடைய செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதில் சந்தேகங்கள் இருந்தால் அவற்றைத் தெளிவுபடுத்துவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

- **இமுச ஏற்றுமதியாளர்களுக்காக கடதாசியற்ற இறக்குமதி மற்றும் ஏற்றுமதி ஆவணங்கள் செயலாக்கம்**

தொற்றுநோய் உச்சமாக உள்ள காலத்தில் பிரயாணத் தடைகள் அமுல்படுத்தப்பட்ட காரணத்தினால் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி ஆவணங்களுக்கான அனுமதியைப் பெறுவதற்கு நேரடியாகச் சமூகமளிக்கமுடியாத பிரச்சனைக்குத் தீர்வாக, இமுச இலங்கை சுங்கத்துடன் கலந்தாலோசித்து, ஒரு கடதாசியற்ற இறக்குமதி மற்றும் ஏற்றுமதி ஆவண செயலாக்கத்தை அமுல்படுத்தியுள்ளது. கொழும்பு, கட்டுநாயக்க, மற்றும் பியகமவிலுள்ள ஆவண மையங்களில் ஏற்றுமதிக்கான சுங்க வெளிப்படுத்தல்கள் (CUSDEC s) ஏற்கெனவே கிடைக்கும்.

மேற்கண்ட நிகழ்நிலை (online) அனுமதி வழங்கும் வசதி சுங்க வரி செலுத்தவேண்டியதல்லாத தெரிந்தெடுக்கப்பட்ட மூலப்பொருட்களின் இறக்குமதிக்காக அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. ஒற்றைச் சாளர வசதி அமுல்படுத்தலுடன், இமுச நிறுவனங்களால் பொறித்தொகுதி மற்றும் இயந்திரங்கள் இறக்குமதி உட்பட முற்றுமுழுதான கடதாசியற்ற தீர்வும் அமுல்படுத்தப்படவுள்ளது.

❖ **விழிப்புணர்வை அதிகரித்தல்**

இமுச, கொவிட் - 19 க்கான தயார்நிலை மற்றும் பிரதிபலிப்பு பற்றிய செயற்பாட்டு வழிகாட்டல்கள், பொலிஸ் தலைமையகத்தினால் வழங்கப்பட்ட சுற்றறிக்கைகள், சுகாதார அமைச்சின் தொற்றுநோய் பிரிவினால் வெளியிடப்பட்ட பதாதைகள் என்பனவற்றை சகல தொழில்முயற்சிகளுக்கும் விநியோகித்ததுடன், இந்த வழிகாட்டல்களின் கீழ் செயற்படும்படி தொழில்முயற்சிகளின் முகாமைத்துவத்திற்கு அறிவூட்டப்பட்டது. நோய் மற்றும் தடுப்பு பற்றிய அறிவை உறுதிப்படுத்துவதற்கு சுகாதார அமைச்சின் உதவியுடன் நிகழ்நிலை விழிப்புணர்வு நிகழ்ச்சிகளையும், நிறுவனங்களுக்குள் விழிப்புணர்வு/கண்காணிப்பு நிகழ்ச்சிகளையும் நடத்தியதுடன், கொவிட்-19 தொற்றுநோய் சம்பந்தமான தகவல்களைப் பகிர்ந்துகொள்வதற்காக இமுச தொழில்முயற்சிகளுக்குள் மையப்புள்ளியாக சுறுசுறுப்பான சுகாதார குழுக்களும் நிறுவப்பட்டன.

❖ **பல்வகை உற்பத்திக்கு அனுமதி வழங்கல்**

தொழில்முயற்சிகளின் வேண்டுகோள்களுக்கு இணங்க பல்வகை உற்பத்திக்கு இமுச இடமளித்தது. கொவிட்- 19 தொற்றுநோய் காரணமாக தபாஉ க்கு உலகம் முழுவதும் ஏற்பட்ட அதிகரித்த கேள்வியைக் கருத்தில்கொண்டு 2020 முதல் அரையாண்டு முடிவில் ஒரு மேலதிக நடவடிக்கையாக தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் உற்பத்தி செய்வதற்கு கிட்டத்தட்ட 50 நிறுவனங்களுக்கு இமுச அனுமதி வழங்கியது. ஏற்றுமதிக்கான இந்த மேலதிக உற்பத்தி 2020 ஏப்ரல் முதல் 2021 ஜனவரி வரையான காலப் பகுதியில் நாட்டுக்கு ஐஅடொ 136.4 மிலி மேலதிக வெளிநாட்டு செலாவணியை ஏற்படுத்தியது.

❖ **இமுச கட்டணங்களுக்கு தவணைமுறை கொடுப்பனவு திட்டம்**

தொற்றுநோய் காலத்தில் அமைதி குறைந்த செயற்பாடுகள் காரணமாக ஏற்பட்ட நிதி நெருக்கடிகளைக் கருத்தில்கொண்டு இமுச பதிவுசெய்யப்பட்ட தொழில்முயற்சிகளுக்கு ஒரு நிவாரணத்தை வழங்கி, இமுச கட்டணங்களை அதாவது பொருத்தமான வருடாந்த கட்டணம்/நில வாடகை என்பவற்றை தவணைமுறை அடிப்படையில் செலுத்துவதற்கு இடமளித்தது.

❖ **உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கு விதிக்கப்பட்ட இறக்குமதி கட்டுப்பாடுகளுக்கு இமுச இன் மத்தியஸ்தம்**

பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதுடன், கொவிட்-19 தொற்றுநோயின் விளைவைக் குறைப்பதற்குமான அதன் முயற்சிகளில் ஒரு பகுதியாக நிதி அமைச்சு குறிப்பிடப்பட்ட மூலப்பொருட்களின் இறக்குமதிக்கு தற்காலிக கட்டுப்பாட்டை விதித்தது. இலங்கை நாணயத்தை ஸ்திரப்படுத்துவதுடன், கொடுப்பனவு மீதி மேலான கெடுதலான விளைவைக் குறைப்பதற்குமாக இந்தக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டபோதும், உற்பத்தித் துறையில் மேலும் வரையறைக்கு வழிவகுத்தது.

ஏற்றுமதி சார்ந்த நிறுவனங்களும், பாரிய அளவிலான திட்டங்களும் தடங்கலின்றி உற்பத்தியை நிர்வகிப்பதற்காக அசாதாரண சந்தர்ப்பங்களில் முடிந்தளவு உயர்ந்த மட்டத்தில் இமுச நிறுவனங்களுக்கு விதிவிலக்கு வழங்கும்படி இமுச இறுப்பு ஆலோசனை குழு மூலம் மத்தியஸ்தம் வழங்கியது.

❖ **இலங்கையிலிருந்து தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் (தபாஉ) ஏற்றுமதிக்கு அல்லது மீள்ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள்**

மருத்துவ கருவிகள் என மேற்கோள் காட்டப்பட்ட (இலங்கைக்குள் கிடைக்கும்) விசேட வர்த்தமானி இல.2167/17 – வெள்ளிக்கிழமை, மார்ச் 20, 2020 இல் வெளியிடப்பட்ட 2020 ஆம் ஆண்டின் ஒழுங்குவிதி இல.2 "தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் உட்பட எந்த மருத்துவ கருவியையும் இலங்கையிலிருந்து ஏற்றுமதி அல்லது மீள் ஏற்றுமதி" யை தடைசெய்தது. உள்ளூர் தேவைகள் பாதுகாக்கப்படும் என்பதை உறுதிப்படுத்தி, தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் ஏற்றுமதி மற்றும் விநியோக கட்டுப்பாடுகளைத் தளர்த்தவேண்டிய முக்கியத்துவம் இமுச இனால் சம்பந்தப்பட்ட அதிகாரங்களுக்குத் தெரிவித்து வழிப்படுத்த முடிந்தது.

பொதுவாக இமுச ஏற்றுமதி சார்ந்த நிறுவனங்கள் தீர்வைச் சலுகைகளுக்கான தகமையைப் பெறுவதற்கு அவற்றின் உற்பத்தியில் 80% ஐ ஏற்றுமதி செய்யவேண்டும். அத்துடன், ஒரு ஏற்றுமதி சார்ந்த நிறுவனம் இறக்குமதி செய்யப்பட்ட உள்ளீடுகளுக்கான சுங்கத் தீர்வு மற்றும் சகல பொருத்தமான கட்டணங்களுக்கு உட்பட்டே நிறுவனத்தின் உற்பத்தியில் அதிகூடியதாக 20% ஐ மாத்திரமே உள்ளூர் சந்தைக்கு வழங்குவதற்கு அனுமதியளிக்கப்படுகிறது.

தனிப்பட்ட பாதுகாப்பு பொருட்களையும், நுகர்பொருட்களையும் இந்த ஏற்றுமதி சார்ந்த நிறுவனங்கள், இமுச உடன் ஏற்படுத்தப்பட்ட தொடர்புடைய ஒப்பந்தத்தின் கீழ் உள்ளூர் சந்தைக்கு விநியோகிப்பதற்கு ஒப்புக்கொள்ளப்பட்ட அளவைப் பொருட்படுத்தாது, ஒரு தேசிய தேவையாகவும், காலத்தின் தேவையாகவும் கருதப்பட்டு, சுகாதார அமைச்சு, சுதேச வைத்திய சேவைகள், சுகாதார சேவைகள் திணைக்களம், முப்படை, இலங்கை பொலிஸ் மற்றும் கொவிட் மையம் போன்ற அரச நிறுவனங்கள் கோரிக்கைவிடும்போது, இமுச இன் ஒப்புதலுடன் வழங்குவதற்கு/அன்பளிப்பு செய்வதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

அவ்வாறு குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட/அன்பளிப்புச் செய்யப்பட்டவற்றை வருமான வரி தேவைக்காக இறக்குமதி மாற்றாகக் கணிப்பதுடன், அத்தகைய வழங்கல்/அன்பளிப்பிலிருந்து பெறப்பட்ட வருமானத்திற்கு ஏற்றுமதி என்று கருதப்படுகின்றவற்றிற்கு பொருந்தும் சலுகை விகித வருமான வரி சலுகை (14%)ஐ உபயோகிப்பதுடன், குறிப்பிடப்பட்ட நிறுவனங்களுக்கு அவ்வாறு வழங்கப்பட்ட/அன்பளிப்புச் செய்யப்பட்டவற்றிற்கு சுங்கத் தீர்வு, துறைமுக மற்றும் விமானநிலைய அறவீடு, செஸ் (CESS), பெறுமதிசேர் வரி போன்றவை அடங்கலாக சகல பொருந்தக்கூடிய வரிகள் மற்றும் அறவீடுகளிலிருந்து விலக்கு வழங்குவதைக் கருத்தில் கொள்ளும்படியும் இமுச நிதி அமைச்சிற்கு பிரேரித்துள்ளது.

# எங்கள் மக்கள்


இமுச இன் பயணத்தில் பொருளாதாரத்தை இயக்குவதற்கு முதன்மையான பலம் எங்கள் மக்களே என்பதுடன் தேசத்தினது சமூக அபிவிருத்தியும் அதன் மக்களே. உணர்வுபூர்வமாக பொது சேவைக்கான அவர்களின் வலுவான உணர்வின் உந்துதலோடு இமுச குழுவினர் தேசம் மேலும் செழிப்படைய ஆதரவளிப்பதற்கு பிரயத்தனப்படுகிறது. இந்தத் தேசிய பொறுப்பை நிறைவேற்றுவதற்கு வேண்டிய தனிப்பட்ட மற்றும் தொழில்துறைசார் ஆதரவு மூலம் சபையில் அவர்களுடைய வாழ்க்கை சதா தீவிரமாக்கப்படுகிறது.

## இமுச இலங்கை அரச சார்பு துறையில் தேடப்படும் ஒரு நிறுவனமாகும்.

இலங்கை முதலீட்டுச் சபை 1978 இல் ஆரம்பித்தது முதல் நாடு முழுவதிலுமுள்ள பல்வேறு சமூக பின்னணிகளைக் கொண்டிருக்கின்றவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கியுள்ளது. பொது அல்லது அரச சார்பு துறையில் தங்களுடைய தொழிலைத் தொடரவிரும்பும் பிரஜைகளால் அதிகளவு தேடப்படும் நிறுவனங்களில் இதுவும் ஒன்றாகத் தொடர்ந்துவருகிறது. நாட்டின் கூற்றைச் சர்வதேச முதலீட்டு அரங்கிற்கு எடுத்துச் செல்வதற்கான பலத்தையும், நம்பிக்கையையும் அதன் குழு உறுதிப்படுத்துவதற்கு சபைக்குள் ஒரு மட்டத்தை இமுச தொடர்ந்து நிலைநிறுத்திவருகிறது. வணிகத்தின் அமைப்பினதும், இயல்பினதும் தேவை இமுச அதிகளவு பல்வகை திறனும், சாமர்த்தியமும் கொண்ட திறமையானவர்களை உருவாக்கச் செய்வதாகும்.


## மக்களை முகாமைத்துவம் செய்வதற்கு இமுச இன் அணுகுமுறை

இமுச யை ஒரு நிறுவனம் என்று விபரிப்பது எதுவென்றால் அதன் சாத்தியமானதும், அது மக்களை மையப்படுத்தி பின்பற்றுகின்ற நடைமுறைகளுமேயாகும். எங்களுடைய நடைமுறைகள் நிறுவனத்திற்கும், பாரிய அளவில் நாட்டிற்கும் மதிப்பை ஏற்படுத்தும் ஒரு சந்தோஷமானதும், உற்சாகமானதுமான வேலைப் படையை உறுதிப்படுத்துகிறது. மக்கள் முகாமைத்துவக் கடமைகளாவன மவஅ (HRD) க்கு ஆட்சேர்ப்பு மற்றும் தேர்வு முதல் நலன்புரி, ஒழுக்காற்றுமுறை வரையாகும். இந்தக் கடமைகள் அனைத்தின் கீழும் மவ நடைமுறைகளை நிறைவேற்றும்போது இமுச சமத்துவம், பக்கச்சார்பின்மை, மற்றும் நெறிமுறையை செய்துகாட்டுவது என்பவற்றை வலியுறுத்துகிறது. ஒரு அரச சார்பான நிறுவனமாக இருப்பதால் பொது சேவையே இமுச இன் இயங்கும் நோக்கமாகும். இது அதன் குழுக்கள் அனைத்தினாலும் பொதுவாகப் பகிரப்படுகிறது. எனவே எங்களுடைய மக்கள் பற்றிய சகல மவ நடைமுறைகளும் உயர்மட்ட சமத்துவத்தை செய்துகாட்டுவதை உறுதிப்படுத்தும் அதேவேளை அரச சட்டங்கள், ஒழுங்குமுறைகள், மற்றும் கொள்கைத் தீர்மானங்களுக்கு இணங்கத் துல்லியமாக மேற்கொள்ளப்படுவதை உறுதிசெய்து மேற்கொள்ளப்படுகிறது. தேசிய பொருளாதாரம் குறிப்பிடத்தக்க அளவு தங்கியுள்ள ஒரு முக்கிய தேசிய நிறுவனமாகையால் இமுச நிறுவனம் தான் கொண்டுள்ள பொறுப்பையும், .இந்த தேசிய பொறுப்பை நிறைவேற்றுவதற்கு மவ அதன் குழுவை இயக்குவதற்கான தனது பொறுப்பையும் பலவீனப்படுத்துவதில்லை. இமுச தாபிக்கப்பட்ட ஆரம்பம் முதல் நடைமுறைகளாக உள்ள கொள்கைகள் மற்றும் ஆளும் கட்டமைப்புகள் நிறுவனத்தின் மாறிவரும் சூழ்நிலைக்கேற்ப இயற்கையாகவே மாற்றங்களுக்கு உட்படுகிறது. நிலையானதன்மை மற்றும் நம்பகத்தன்மை என்பவற்றின் அடிப்படையில் அரச நிறுவனங்களைப் பாதுகாப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட இந்தக் கொள்கைகளால் இமுச வழிநடத்தப்படுகிறது. மேலும் இந்தக் கொள்கைகள் அரச நிறுவனங்களில் உள்ளக நடைமுறைகளுக்கு வழிகாட்டுகின்றன. அவர்கள் வழங்குகின்ற ஒழுங்குமுறை வழிகாட்டுதல்கள் மக்கள் முகாமைத்துவத்தின் அடிப்படையில் சிறந்த நடைமுறைகளை உறுதிசெய்வதற்கு எங்களுக்கு உதவுவதுடன், குறுக்கீடுகளிலிருந்து பாதுகாப்பது அதன் சகல மக்களுக்கும் சமமான உதவிகளை நிறுவனம் வழங்குவதற்கும் உதவுகிறது. ப மற்றும் அ (T&D) நடைமுறைகள் கற்பது ஒரு வரையறுக்கப்பட்ட குறிப்பிட்ட குழுவிற்கு மாத்திரமல்ல, மாறாக நிறுவனத்தின் சகல ஊழியர்களுக்கும் நன்மையளிப்பது என்பதை உறுதிப்படுத்துவதற்காக ஒரு வளைந்துகொடுக்கும் அணுகுமுறையைக் கொண்டுள்ளது. நலன்புரி மற்றும் ஒழுக்காற்றுமுறை என்பன ஊழியர்களுக்கு அவர்களின் தரம் அல்லது பதவியைப் பொருட்படுத்தாது அனைத்து ஊழியர்களுக்கும் ஒத்திருக்கிறது. நிறுவனத்திற்குள் ஊழியர் நடத்தையை வழிநடத்தும் நடைமுறைகளை வகுக்க இமுச இல் ஆளும் கொள்கைகள் உள்ளன. அரச அதிகாரிகளிடமிருந்து எதிர்பார்க்கப்படும் ஒரு உயர்ந்த பணி நெறிமுறைகளைக் கடைப்பிடிப்பதற்கு அதன் மக்களை இமுச ஊக்கப்படுத்துவதுடன், அத்தகைய கொள்கைகளிலிருந்து ஏதாவது விலகல்கள் இருந்தால் அவை முறையான செயல்முறை மூலம் தீர்க்கப்படும்.




*"ஒரு அரச சார்பான நிறுவனமாக அடையாளம் காணப்பட்டபோதும் இமுச பொது மற்றும் தனியார் துறைகளை இணைக்கும் பிரதானமானதும், நேரடியானதுமான பாலமாகத் தொழிற்படுகிறது. அவ்வாறு எங்களுடைய சகல ஊழியர்களும் சேவை மனப்பான்மையையும், தனியர் துறை மனநிலையையும், தனியார் துறைக்கு வசதியளிக்கின்ற பணி நெறிமுறையையும் கொண்டிருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது."*

## மனித வள கொள்கை கைநூல்




ஆட்சேர்ப்பு மற்றும் தேர்வு, ஊழியர்கள் நியமனம், ஊதியம், வேலை நேரம், வரவு மற்றும் விடுமுறைகள், தகுதிகாணல் மற்றும் பதவியை உறுதிப்படுத்துதல், செயலாற்றுகையை மதிப்பிடல், மற்றும் பயிற்சி மற்றும் அபிவிருத்தி என்பவை அடங்கலாக சகல இமுச நடைமுறைகளும் இலங்கை இமுச மனித வள கொள்கை கைநூலைப் பின்பற்றி அமுல்நடத்தப்படுகிறது. மேலும், இந்தக் கைநூல் பதவிஉயர்வு, இடமாற்றம் மற்றும் பதவி இறக்கம், வேலைக்கான நிபந்தனைகள், குறைகள் மற்றும் தொழிற்சங்கங்கள் சம்பந்தப்பட்ட விடயங்கள் பற்றிப் பின்பற்றவேண்டிய வழிகாட்டல்களை வழங்குகிறது. இந்தக் கைநூலைப் பின்பற்றுவது எங்களுடைய நடைமுறைகள் மக்கள் அனைவரையும் மையப்படுத்துவதுடன், அனைவருக்கும் நியாயமானது என்பதையும் உறுதிப்படுத்துகிறது. ஒரு அசாதாரண சூழ்நிலை ஏற்பட்டு, பணிப்பாளர் சபையின் விசேட ஒப்புதலின் கீழ் இந்தக் கொள்கைகளை விட்டு விலகுவதை நியாயப்படுத்த முடிந்தாலேயன்றி, இமுச உறுதியாக மனித வளங்கள் கொள்கை கைநூலின் வழிகாட்டல்களைப் பின்பற்றுகிறது.

## ஆட்சேர்ப்பு திட்டம்

ஆட்சேர்ப்பு நடைமுறைகள் இமுச இன் ஆட்சேர்ப்பு திட்டத்தை கடுமையாகப் பின்பற்றி செயற்படுத்தப்படுகிறது. உள்வாரியாக அல்லது வெளிவாரியாக திறமைகளை உள்வாங்கும்போது பின்பற்றுவதற்கான வழிகாட்டல்களும், கருத்தில் கொள்ளவேண்டிய பிரமாணங்களும் திட்டத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

## நடத்தை விதி

ஒரு உயர் மட்ட தொழிலாளுமை மற்றும் பலமான பணி நெறிமுறையைக் கடைப்பிடிப்பதை நாங்கள் நம்புகிறோம். நாங்கள் எங்களுடைய முக்கிய விழுமியங்களை எப்போதும் நிலைநாட்டுவதில் உறுதியாக இருக்கிறோம். இமுச இன் நடத்தை விதி, இமுச இன் சகல ஊழியர்களும் பின்பற்ற வேண்டிய நெறிமுறையைத் தெளிவாகத் தெரியப்படுத்தும் ஓர் முறையான ஆவணமாகும். "ஒழுக்காற்று செயல்முறை விதிகள்" இன் கீழ் நடத்தை விதி, சபையின் ஊழியர்களின் தவறான நடத்தை அல்லது தவறு சம்பந்தப்பட்ட எந்தவொரு சம்பவத்திலும் பின்பற்றவேண்டிய தேவையான செயற்பாட்டை வழங்குகிறது.

## எங்களுடைய மக்களின் அமைப்பு


இமுச, கொழும்பிலுள்ள எங்களுடைய தலைமையகம், ஏற்றுமதி செயலாக்க வலயங்கள்/பூங்காக்கள்/ நாடெங்கிலும் அமைந்துள்ள பிராந்திய அலுவலகங்கள் என்பவற்றைச் சேர்ந்தவர்களென மொத்தமாக 1297 அங்கத்தவர்களைக் கொண்டுள்ளது. எங்களுடைய ஊழியர் கோப்பில் மூன்று ஊழியர் பிரிவுகள் உள்ளன.

**நிறைவேற்று அதிகாரிகள் 47%**

**நிறைவேற்று அதிகாரிகள் அல்லாதோரும் PL தரத்தினரும் 53%**

எங்களுடைய குழு 47% தலைமையகத்தையும், ஏற்றுமதி செயலாக்க வலயங்களையும் சேர்ந்த நிறைவேற்றதிகாரிகளையும், 53% நிறைவேற்றதிகாரிகள் தரத்தில் அல்லாதோரையும், PI தரத்தினரையும் கொண்டுள்ளது. பல்தரப்பட்டு இருப்பது உற்சாகப்படுத்தப்படுவதுடன், இமுச இற்குள் ஆதரவளிக்கப்படுவதும் எங்களுடைய பாரிய பலங்களுள் இதுவுமொன்றென நாங்கள் நம்புகிறோம்.

சபையில் ஆண் பெண் ஊழியர்கள் தங்களுடைய தொழிலில் முன்னேறுவதற்கு நாங்கள் சம அளவில் ஊக்கத்தையும், சந்தர்ப்பத்தையும் வழங்குகிறோம். எங்களுடைய குழு 34% பெண் ஊழியர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதேவேளை 66% ஆண் ஊழியர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. அவர்களுடைய பிரதிநிதித்துவம் எங்களுடைய ஊழியர் கோப்பில் சகல பிரிவுகளிலும் உள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது. நிறைவேற்றதிகாரி ஊழியர் கோப்பு 48% பெண் ஊழியர்களைப் பிரதிநிதித்துவப் படுத்துவதுடன், 52% ஆண் ஊழியர்களையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.. இமுச இல் குறிப்பிடப்பட்ட எண்ணிக்கையான பெண் ஊழியர்கள் தொழில் முன்னேற்றத்தை அதிகளவு காட்டுவதுடன், சபையின் உயர்மட்ட முகாமைத்துவ பதவிகளுக்கு வரிசையில் உயர்ந்து செல்வதைத் தொடர்ச்சியாக அவதானிக்க முடிகிறது. ஆண், பெண் சமத்துவத்தின் விளைவாக இமுச இல் 163 பெண் உத்தியோகத்தர்கள் கனிஷ்ட முகாமையாளர் என்ற திறனுடன் செயற்பட்டுக்கொண்டிருப்பதுடன், 107 பேர் நடுத்தர முகாமைத்துவ தரத்திலும் செயற்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இது அந்த இரண்டு பிரிவுகளிலும் முறையே 57% உம், 44% உம் கொண்டுள்ளதாகும். சிரேஷ்ட முமுகாமைத்துவ பிரிவு 78 உத்தியோகத்தர்களை உள்ளடக்கியது. அவர்களுள் 72% ஆண் உத்தியோகத்தர்களும், 28% பெண் உததியோகத்தர்களுமாவார்கள்.




மேலும் கடந்த சில ஆண்டுகளாக மூலோபாய பதவிகளில் பெண்களின் பிரதிநிதித்துவத்தில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. 2020 வரை நிறைவேற்றுப் பணிப்பாளர் மற்றும் வலய தலைமைப் பகுதிகளில் 23% பெண் உத்தியோகத்தர்களால் பிரதிநிதித்துவப்பட்ட அதேவேளை குறிப்பிட்ட பிரிவு 77% ஆண் உத்தியோகத்தர்களால் பிரதிநிதித்துவப்பட்டது. நிறுவனத்தின் சகல மட்டங்களிலும் இரு பாலாரும் சமமமாகப் பங்குபற்றுவதை அதிகரிக்க எண்ணியுள்ளதால், ஆண், பெண் சமத்துவம் என்ற எங்களுடைய நடைமுறை தொடரும். எங்களுடைய பன்முகத்தன்மை, பாலினத்திற்கு அப்பாலான பின்னணி, வயது, மற்றும் அனுபவம் என்பன சகல இனக் குழுக்கள் மற்றும் சிறுபான்மையினரை உள்ளடக்கியதென விரிவடைகிறது. நாங்கள் கூட்டு மனப்பான்மையை ஊக்குவிப்பதுடன், சகல இனக் குழு ஊழியர்களுக்கிடையே ஒத்துழைப்பையும் ஏற்படுத்துகிறோம். நான்கு தசாப்தங்களுக்கு மேலாக வணிகத்தில் ஈடுபட்டிருப்பதால் “ஐந்து வருடங்களுக்குக் குறைவான” அனுபவம் உள்ள ஊழியர்கள் முதல் “20 வருடங்களுக்கு மேலான” அனுபவத்தைக் கொண்ட ஊழியர்கள் இமுச இல் இருக்கிறார்கள். பல ஆண்டுகளாக எங்களுடைய ஊழியர்கள் முதலீட்டை மேம்படுத்துவதுடன், முதலீட்டாளர்கள் சேவை மற்றும் உள்ளக கடமைகள் என்பன சம்பந்தமாக விசேட அனுபவத்தைப் பெற்றிருக்கிறார்கள். எங்களுடைய நிறைவேற்று அதிகாரிகளில் 60% ஆனவர்கள் பல்வேறு துறைகளில் பட்டதாரிகளாவார்கள். அவர்களுள் 26% ஆனவர்கள் முதுமானிப் பட்டம் பெற்றிருக்கிறார்கள். இமுச சபைக்குள் உயர் கல்வியை ஊக்குவிப்பதுடன், எங்களுடைய ஊழியர்களின் உயர் கல்விக்கு அனுசரணை வழ்குவதற்கு மவஅ கொள்கைகளை விருத்திசெய்துள்ளது. நாங்கள் ஈடுபட்டுள்ள வேகமாக மாறுகின்ற, தீவிரமான போட்டி வணிகத்தில் தொடர்ந்தும் தொழில்துறை அபிவிருத்தி மிகவும் முக்கியமானது என்று நாங்கள் நம்புகிறோம்.

## எங்களுடைய எதிர்காலம் - ஒரு மாற்றப்பட்ட பாகம்

வணிக நிலப்பரப்பில் ஏற்பட்ட நிரந்தரமான மாற்றங்களைப் பின்பற்றி, இமுச மக்கள் முகாமைத்துவத்தில் அதன் பாகத்தை வேறுவிதமாகக் காண்கிறது. தொற்றுநோய் ஏற்படாதிருந்தால் நாங்கள் தொடர்ந்தும் பின்ப்ற்றியிருக்கக்கூடிய பாகம் "புதிய இயல்பு" என்று அடிப்படியில் மாற்றப்பட்டது. தற்போது தொற்றுநோய் உள்ளபோதும் ஊழியர்கள் நிறுவனத்தை வழிநடத்திச் செல்வதால் இமுச தொடர்ந்தும் ஊழியர்களுக்கு ஆதரவு வழங்க எண்ணியுள்ளது. தொற்று நோயின்போதும் தங்களுடைய வலுவான பொது சேவை அர்ப்பணிப்பை வெளிப்படுத்திய குழுவுடன் நாடு எதனை எங்களிடமிருந்து எதிர்பார்க்கின்றதோ அதனை அடையமுடியுமென நாங்கள் நம்புகிறோம். புதிய இயல்பான சூழ்நிலைகளில் சகல அம்சங்கங்களையும் பின்பற்றுவதன் மூலம் இமுச தொடர்ந்து அவர்களுக்கு வலுவூட்டுவதுடன், அவர்களுக்கு ஆதரவையும் வழங்கும்.

மேலும், மிகவும் சுறுசுறுப்பானதும், நெகிழ்வானதுமான வேலை நடைமுறைகளை விருத்தி செய்வதன் மூலம் எங்களுடைய தற்போதைய நடைமுறைகளுக்கு ஒரு மாற்றமான விளைவைக் கொடுப்பதற்கு எண்ணியுள்ளோம். வழங்கப்படும் எங்களுடைய சேவைகளின் சாமர்த்தியத்தையும், நற்பயனையும் அதிகரிப்பதற்கு திறன்மேம்பாட்டில் நாங்கள் கவனம் செலுத்தவுள்ளோம். உலகம் முழுவதிலும் இந்த தொற்றுநோய் காலத்தில் தீவிரமான தொழில்நுட்ப புதுமைகள் நியாயமான சவால்களின் பங்குடன் எங்களுக்கு பல வாய்ப்புக்களை உருவாக்கியுள்ளது. மாற்றப்பட்ட சூழ்நிலையின் கீழ் இமுச ஒரு நிறுவனமாக எங்களுடைய ஊழியர்களுக்கு ஆதரவளித்து, வலுவூட்டுவதுடன் வசதியளித்து மாற்றத்தை ஆக்கபூர்வமாக ஏற்றுக்கொண்டு, எங்களுடைய நாடு சிறந்த பலனைப் பெறுவதை எதிர்பார்த்து நிற்கிறது. ஆகவே எங்களுக்கு ஒரு மாற்றப்பட்ட பாகமாகும்.

# கூட்டாண்மை சமூகப் பொறுப்பு

கூட்டாண்மை சமூக பொறுப்பு ஒரு வணிகம், வியாபார அடையாளத்தை மேம்படுத்துவதுடன், சமூக மற்றும் சூழல் பிரச்சனைகள் பற்றிய பொது விழிப்புணர்வை ஏற்படுத்தும் அதேவேளை, சிறந்த நெறிமுறை நடைமுறைகளுக்கும், நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கும் சமூகப் பொறுப்புடன் நடத்தும் வழியை எடுத்துக் காட்டுகிறது.

நிறுவனங்களை கூசபொ நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபடுவதற்கு ஊக்கமளிக்கும் அதேவேளை, இமுச தன்னையும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு, பன்முகத்தன்மை, தொழிலாளர் நடைமுறைகள் மற்றும் தன்னார்வத்தொண்டு போன்ற கூட்டாண்மைப் பொறுப்பின் பலவேறு தூண்களில் ஈடுபடுத்துகிறது.

❖ **உற்பத்தி தொழில்முயற்சிகள் முகம்கொடுக்கும் தொழிலாளர் பற்றாக்குறையைக் குறைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்**

இமுச அதன் தொழில்முயற்சிகள் தெரிவித்த தொழிலாளர் பற்றாக்குறையை இலக்குவைத்து பின்வருவன போன்ற பல்வேறு வேலைகளை ஆரம்பித்துள்ளது.:

- **ஊழியர்கள் சேவைகள் பிரிவுகள் (ஊசேபி)**

  தொழில் வெற்றிடங்கள் உள்ள இடங்களில் தொழில்முயற்சியாளர்களின் முகாமைத்துவ பிரதிநிதிகளும், தொழில் தேடுவோரும் சந்திப்பதற்கு ஒவ்வொரு வலயத்திலும் ஊழியர்கள் சேவைகள் பிரிவுகள் (ஊசேபி கள்) ஏற்படுத்தி, செயற்பட்டு வருகின்றன. ஊசேபி கள் கொவிட் - 19 தொற்றுநோய் முதலர்வது அலை நீங்கிய பின்னர் செப்டம்பர் 2020 இல் தனது செயற்பாடுகளை மீள ஆரம்பித்தன.

- **பகற்காப்பு நிலையங்கள் மற்றும் முன்பள்ளிகளை தாபித்தல்**

  பகற்காப்பு நிலையங்கள் மற்றும் முன்பள்ளிகளை தாபித்தல் ஊழியர்கள் தங்களுடைய குழந்தைகளை வலயங்களுக்குள் ஒரு பாதுகாப்பான இடத்தில் தங்கவிட்டு, தங்களுடைய தொழிலைத் தொடர்ந்து செய்வதற்கு விரும்புகின்றவர்களுக்கு ஒரு உறுதியான தீர்வை வழங்குவதாக உள்ளது. இது உயர்ந்த அளவிலான தொழில் பிறழ்வைக் குறைத்துள்ளதுடன், புதிதாகச் சேர்ந்துகொள்கின்றவர்களுக்கு வலயங்ளைப்பற்றி கவரக்கூடிய அபிப்பிராயத்தை ஏற்படுத்துவதாகவும் உள்ளது. கட்டுநாயக ஏசெவ, பியகம ஏசெவ மற்றும் மாவத்தகம ஏசெவ ஆகியவற்றிலுள்ள பகற்காப்பு நிலையங்கள் செப்டம்பர் 2020 முதல் சேவையை ஆரம்பித்துள்ளன.


  கஷ்டமான நேரங்களில் நிறுவனங்கள் தங்களுடைய கூட்டாண்மை பொறுப்புக்களை சமூகத்திற்கு மிகவும் துரிதமாக நிறைவேற்றுவதற்கான தேவை ஏற்படுகிறது. கொவிட்-19 கூட்டண்மைத் துறையில் தயாளதன்மைக்கான களத்தை அமைத்தது.

  கொவிட் - 19 தொற்றுநோய் காலம் முழுவதும் பல நிறுவனங்கள் தங்களுடைய ஊழியர்களினதும், கொவிட்-19 தொற்றுநோய்க்கு எதிராக முன்னணியில் நின்று பணியாற்றியவர்களினதும் வாழ்வை உயர்த்துவதற்கு தங்களுடைய உற்பத்திகளையும், சேவைகளையும் வழங்கியுள்ளன. இமுச நிறுவனங்கள் தபாஉ களை ஆயத படைகளுக்கும், சுகாதார அதிகாரிகளுக்கும் வழங்கியுள்ளன. அநேகமான நிறுவனங்கள் தங்களுடைய ஊழியர்களையும், அவர்களுடைய குடும்பத்தினரையும் கவனித்துக்கொள்வதற்காக அவர்களுக்கு உலர் உணவுகளையும், வாடகை ஹோட்டல்களில் தங்குமிட வசதிகள் போன்றவற்றையும் வழங்கின. சில தொழில்முயற்சிகள் நாடு முடங்கிய காலத்தில் ஊழியர்களுக்கு முழு சம்பளத்தைக்கூட வழங்கின. அநேகமான தொழில்முயற்சிகள் சுகாதார வழிகாட்டல்களுக்கமைய மேலதிக போக்குவரத்து வசதிகள், சுத்தப்படுத்துதல் மற்றும் அணியும் தபாஉ களை தங்களுடைய ஊழியர்களுக்கு வழங்குவதற்கு அதிகளவு விலை கொடுத்துள்ளன. மேலும் இந்த தொழில்முயற்சிகள் சுகாதார அமைச்சின் வழிகாட்டல்களுக்கமைய ஊழியர்களின் பீசீஆர் மற்றும் அன்ரிஜென் (PCR/Antigen) பரிசோதனைகளுக்காக அதிகளவு விலையை இன்னும் செலுத்திக்கொண்டிருக்கின்றன.

# நிதி மீளாய்வு 2020


## நிதி சிறப்பம்சங்கள்


| டிஸம்பர் 31 முடிவடைந்த ஆண்டுகான நிதி சிறப்பம்சங்கள் | 2020 (ரூபா மிலி.) | 2019 (ரூபா மிலி) | மாற்றம் (%) | 2018 (ரூபா மிலி) |
|---|---|---|---|---|
| வருமானம் | 4,251 | 4,646 | (8.50) | 3,890 |
| மொத்த செயற்பாட்டு செலவுகள் | (3,591) | (3,773) | 4.84 | (3,375) |
| செயற்பாட்டு இலாபம் | 660 | 873 | (24.33) | 515 |
| நிதி வரவு | 322 | 411 | (21.84) | 344 |
| நிதி செலவுகள் | (14) | (11) | (30.17) | (8) |
| வரிக்கு முன்னரான மிகை | 968 | 1,274 | (23.98) | 851 |
| வரி செலவுகள் | (81) | (115) | 29.48 | (92) |
| வரிக்குப் பின்னரான மிகை | 887 | 1,158 | (23.43) | 759 |
| ஏனைய விரிவான வருமானம் | (75) | (51) | (46.37) | (11) |
| மொத்த விரிவான வருமானம் | 812 | 1,107 | (26.68) | 748 |
| வருட முடிவில் நிதி நிலைமை | | | | |
| மொத்த சொத்துகள் | 53,127 | 44,158 | 20.31 | 43,269 |
| மொத்த ஒப்புரவு | 51,868 | 42,685 | 21.51 | 41,631 |



## மிகை


சகல அறிந்த பொறுப்புக்கள் மற்றும் ஆதனம், பொறித்தொகுதி, மற்றும் சாதனம் மீதான தேய்மானத்திற்கான ஒதுக்கீட்டுக்குப் பின்னர், ஆனால் வரிக்கு முன்னரான தொகையான ரூபா 968.14 மிலி. சபையினால் அடைந்த மிகையாகும். ரூபா 81.25 மிலி. தொகை வரியாகக் கழித்த பின்னர், காலப்பகுதிக்கான மிகை ரூபா 886.89 மிலி. ஆக இருந்தது. 2019 இல் அறிக்கையிடப்பட்ட ரூபா 1,158.31 மிலி. உடன் ஒப்பிடுகையில் 2020 ஆம் ஆண்டில் சபையின் வரிக்குப் பின்னரான மிகை 23.43% இனால் குறைவடைந்துள்ளது. 2020 இல் திடீரெனப் பரவிய கொவிட்-19 பொருளாதார வளர்ச்சியைக் குறைவடையச் செய்ததுடன், வருமானத்தின் மந்தநிலை சபையின் தேறிய மிகையின் சரிவிற்குப் பாரியளவில் காரணமாகியது.





## வருமானம்


சபையின் செயற்பாட்டு வருமானம் 2019 இல் ரூபா 4,646.09 மிலி. இலிருந்து 8.50% இனால் 2020 ஆம் ஆண்டில் ரூபா 4,251.30 மிலி. ஆகக் குறைந்தது. இறக்குமதி/ஏற்றுமதி சேவைக் கட்டணங்கள், தேறிய நீர் வருமானம், விற்பனை மற்றும் பிரவேச அனுமதிப் பத்திரம் மற்றும் ஒப்பந்த செயற்பாட்டு கட்டணங்கள் கொவிட்-19 திடீரெனப் பரவிய காரணத்தினால் ஏற்பட்ட வீழ்ச்சி செயற்பாட்டு வருமானத்தில் குறைவை ஏற்படுத்துவதற்குப் பிரதானமாகப் பங்களித்துள்ளது. சபையினால் சம்பாதிக்கப்பட்ட வட்டி வருமானமும் 2019 ஆண்டில் ரூபா 411.44 மிலி. இலிருந்து 2020 இல் 21.84% இனால் குறைவடைந்து ரூபா 321.58 மிலி. ஆகியது. வட்டி வீதச் சரிவே இதற்கான பிரதானமான காரணமாகும். சபையின் மொத்த வருமானம் 2019 இல் ரூபா 5,057.53 மிலி இலிருந்து 2020 இல் ரூபா 4,572.88 மிலி ஆகக் குறைந்தது.






## செயற்பாட்டு செலவினங்கள்

2020 ஆம் ஆண்டில் சபையின் செயற்பாட்டு செலவினங்கள் ரூபா 3,590.87 மிலி. ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 4.84% குறைவாகும். கொவிட்-19 தொற்றுநோய் திடீரெனப் பரவியது சபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளில் மந்தநிலையை ஏற்படுத்தியது. இது குறைவான வருமான வளர்ச்சியில் செலவின மாதிரியின் மாற்றத்திற்கு பங்களித்ததுடன், முக்கியமாக செயற்பாட்டு செலவுகளில் கண்டிப்பான செலவினத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளினால் ஏறத்தாழ ரூபா 182.50 மிலி சேமிப்புக்கும் பங்களித்துள்ளது. மீளாய்வுக்கான காலத்தில் வருமானத்தில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டபோதும், சபையினால் மேற்கொள்ளப்பட்ட இந்த செலவினத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் ஒரு ஆக்கபூர்வமாக தேறிய மிகையை அடைவதற்கு நேரடியாகப் பங்களித்துள்ளது.



## வரிகளுக்குப் பங்களிப்பு

ஆண்டில் மறைமுக மற்றும் நேரடி வரிகள் 54.01 % இனால் சரிவடைந்தன. 2020 ஆம் ஆண்டில் வரிச் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களே இதற்கான பிரதானமான காரணமாகும். ஆண்டுக்கான மறைமுக மற்றும் நேரடி வரிகளாக இமுச இன் பங்களிப்பான தொகை ரூபா 170.04 மிலி. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் கீழ்நோக்கிய போக்கில் உள்ளது. செலவினம் ஒன்றாக அடையாளம் காணப்பட்ட அனுமதியளிக்கப்படாத VAT உள்ளீடு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 112.34 மிலி இனால் வீழ்ச்சியடைந்து 56.02% இனால் குறைவடைந்தது. சபையின் மொத்த நேரடி வரிகள் வட்டி வருமானத்தின் மீதான வட்டியை உள்ளடக்கியதாகும்.

# 2020
# நிதிக் கூற்றுக்கள்

2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன்
முடிவுற்ற வருடத்திற்கானது.

# இலங்கை முதலீட்டுச் சபை

## வருமானக் கூற்று

| டிஸம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கானது | குறிப்பு | 2020<br>ரூபா | 2019<br>ரூபா |
|---|---|---|---|
| **வருமானம்** | **4** | **4,251,299,069** | **4,646,091,668** |
| **கழிக்க: செலவினங்கள்** | | | |
| தொழிற்பாட்டு செலவினங்கள் | **6** | 273,552,379 | 322,000,511 |
| நிர்வாகச் செலவினங்கள் | **7** | 3,192,487,029 | 3,165,507,062 |
| அரச அறவீடுகள் | **8** | 88,787,598 | 254,568,577 |
| ஏனைய செலவினங்கள் | **9** | 36,038,612 | 31,290,988 |
| **மொத்த தொழிற்பாட்டு செலவினங்கள்** | | 3,590,865,618 | 3,773,367,139 |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளின் பெறுபேறுகள்** | | **660,433,451** | **872,724,528** |
| நிதி வருமானம் | | 321,579,138 | 411,444,914 |
| நிதி செலவினங்கள் | | 13,873,362 | 10,657,560 |
| **தேறிய நிதி வருமானம்** | **10** | **307,705,775** | **400,787,354** |
| **வரிக்கு முன்னரான மிகை** | | **968,139,227** | **1,273,511,883** |
| வரிச் செலவினங்கள் | | 81,246,467 | 115,204,576 |
| **காலப்பகுதிக்கான மிகை** | | **886,892,760** | **1,158,307,307** |

# இலங்கை முதலீட்டுச் சபை

## விளக்கமான வருமானக் கூற்று

| டிஸம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கானது | குறிப்பு | 2020<br>ரூபா | 2019<br>ரூபா |
|---|---|---|---|
| **காலப்பகுதிக்கான மிகை** | | **886,892,760** | **1,158,307,307** |
| **ஏனைய விளக்கமான வருமானம்** | | | |
| **கழிக்க**: வரையறுத்த பயன்பாட்டு திட்டம் ஆயுட்கணக்கர் (இலாபம்)/இழப்பு | **21.2** | 75,380,123 | 51,499,585 |
| **காலப்பகுதிக்கான மொத்த விளக்கமான வருமானம்** | | **811,512,637** | **1,106,807,722** |

பக்கம் 46 - 67 வரை தயாரிக்கப்பட்டுள்ள "நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புக்கள்" நிதிக் கூற்றுகளின் அத்தியாவசியப் பகுதியாகும்.

## இலங்கை முதலீட்டுச் சபை

### நிதிசார் நிலைமை கூற்று

| டிஸம்பர் 31 ஆம் திகதியன்றுள்ளவாறு | குறிப்பு | 2020<br>ரூபா | 2019<br>ரூபா |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறை அல்லாத சொத்துக்கள்** | | | |
| ஆதனம், பொறித்தொகுதி, சாதனம் | 11 | 6,159,405,466 | 5,310,547,630 |
| முதலீட்டு ஆதனம் | 12 | 38,854,205,189 | 31,073,365,587 |
| தற்போதுள்ள மூலதன நடைமுறை வேலை | 13 | 1,463,837,429 | 1,982,355,530 |
| நிதிசார் சொத்துக்கள் | 14 | 643,278,444 | 654,403,425 |
| **மொத்த நடைமுறை அல்லாத சொத்துக்கள்** | | **47,120,726,528** | **39,020,672,172** |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| பதிவேட்டுப் பொருட்கள் | | 13,860,225 | 10,272,093 |
| முடிபு செய்தலுக்கான வீடுகள் | | 2,551,000 | 2,551,000 |
| நிதிசார் சொத்துக்கள் | 15 | 216,873,965 | 206,479,430 |
| தொழில்முயற்சிகளிலிருந்து கிடைக்கவேண்டியவை | 16 | 480,733,989 | 315,491,118 |
| முற்கொடுப்பனவுகளும், கிடைக்கவேண்டிய ஏனையவையும் | 17 | 546,747,679 | 264,288,415 |
| காசும், காசுக்கு சமமானவையும் | 18 | 4,745,108,178 | 4,338,222,775 |
| **மொத்த நடைமுறைச் சொத்துக்கள்** | | **6,005,875,037** | **5,137,304,831** |
| **மொத்த சொத்துக்கள்** | | **53,126,601,565** | **44,157,977,003** |
| **ஒப்புரவும் பொறுப்புக்களும்** | | | |
| **ஒப்புரவு** | | | |
| திரண்ட நிதியம் | | 20,911,194,024 | 11,845,461,590 |
| ஒதுக்கங்கள் | | 15,340,693,234 | 15,340,693,234 |
| | | **36,251,887,258** | **27,186,154,824** |
| ஒத்திவைக்கப்பட்ட வருமானம் | 20 | 16,007,082,111 | 15,915,950,349 |
| ஒத்திவைக்கப்பட்ட செலவினம் | 19 | (390,763,524) | (417,422,964) |
| | | **15,616,318,587** | **15,498,527,385** |
| **மொத்த ஒப்புரவு** | | **51,868,205,846** | **42,684,682,209** |
| **நடைமுறை அல்லாத பொறுப்புக்கள்** | | | |
| ஓய்வூதிய பிரதிலாப கடப்பாடுகள் | 21 | 370,952,018 | 329,992,061 |
| நடைமுறை அல்லாத நிதிப் பொறுப்புக்கள் | 22 | 58,969,208 | 74,875,711 |
| **மொத்த நடைமுறை அல்லாத பொறுப்புக்கள்** | | **429,921,226** | **404,867,772** |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| நடைமுறை நிதிப் பொறுப்புக்கள் | 22 | 29,673,285 | 26,977,500 |
| திரண்ட செலவினங்களும் செலுத்தவேண்டிய ஏனையவையும் | 23 | 787,247,092 | 1,018,683,817 |
| செலுத்தவேண்டிய வரி | | 11,554,115 | 22,765,703 |
| **மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள்** | | **828,474,492** | **1,068,427,020** |
| **மொத்த ஒப்புரவும் பொறுப்புக்களும்** | | **53,126,601,565** | **44,157,977,003** |

பக்கம் 46-67 வரை தயாரிக்கப்பட்டுள்ள "நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புக்கள்" நிதிக் கூற்றுகளின் அத்தியாவசியப் பகுதியாகும்.

இந்த நிதிக் கூற்று தயாரித்தலும், சமர்ப்பிப்பதும் பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும்.
இலங்கை முதலீட்டு சபையின் பணிப்பாளர் சபைக்காகவும், அதன் சார்பாகவும் அங்கீகரித்து, ஒப்பமிடப்பட்டுள்ளது.

| சஞ்சய மொஹற்றல | சஞ்சய் குலதுங்க | பீ.ரீ.வனிகசேகர | எஸ்.ஏ.டீ.டீ.சுரவீர |
|---|---|---|---|
| தலைவர் | சபை அங்கத்தவர் | பணிப்பாளர் நாயகம் | நிறைவேற்றுப் பணிப்பாளர்-நிதி |

**24-பெப்-2021**

## இலங்கை முதலீட்டுச் சபை

### ஒப்புரவிலுள்ள மாற்றங்கள் பற்றிய கூற்று

**2020 டிஸம்பர் 31 ஆம் திகதியன்றுள்ளவாறு**

| | திரண்ட நிதியம் ரூபா | மீள் மதிப்பீட்டு ஒதுக்கீடு ரூபா | மொத்த ஒப்புரவு ரூபா |
|---|---|---|---|
| **2019 ஜனவரி 1 ஆம் திகதியன்று மீதி** | **10,953,811,118** | **15,340,693,234** | **26,294,504,352** |
| ஆண்டுக்கான மொத்த விளக்கமான வருமானம் | 1,106,807,722 | - | 1,106,807,722 |
| சொத்துக்களை அடையாளம் காணல் | 248,192 | - | 248,192 |
| வருமானத்தில் மாற்றம் மீதான தாக்கம் -2018 | (439,787) | - | (439,787) |
| கிடைக்கவேண்டியவற்றின் சீராக்கல் மீதான தாக்கம் நேரடியாக ஒப்புரவிலிருந்து கழிக்கப்பட்டவை - இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனம் | (209,600,000) | - | (209,600,000) |
| திறைசேரிக்கான கொடுக்கல் வாங்கல் ஒப்புரவிலிருந்து நேரடியாக அடையாளம் காணப்பட்டவை | (5,365,655) | - | (5,365,655) |
| **2019 டிஸம்பர் 31ஆம் திகதியன்று மீதி** | **11,845,461,590** | **15,340,693,234** | **27,186,154,824** |
| **2020 ஜனவரி 1 ஆம் திகதியன்று மீதி** | **11,845,461,590** | **15,340,693,234** | **27,186,154,824** |
| ஆண்டுக்கான மொத்த விளக்கமான வருமானம் | 811,512,637 | | 811,512,637 |
| திரட்டிய நிதிக்கான பங்களிப்பு | (155,535,700) | | (155,535,700) |
| தற்காலிக மிகை நிதி மீதி | (3,921,984) | | (3,921,984) |
| காணி கையகப்படுத்தப்பட்டதால் பெறத்தக்க மறுசீரமைப்பில் தாக்கம் - இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனம் [1] | 423,360,000 | | 423,360,000 |
| திறைசேரிக்கான கொடுக்கல் வாங்கல் ஒப்புரவிலிருந்து நேரடியாக அடையாளம் காணப்பட்டவை [2] | 134,432 | | 134,432 |
| அரச உரிமை மூலம் புதிய காணியின் பெறுமதி மதிப்பிடல் (பெரீனியல் றியல் எஸ்ரேற் லங்கா (தனியார்) லிமிடட் மற்றும் காலியான காணி) [3] | 7,972,383,349 | | 7,972,383,349 |
| அரசுக்கு அளிக்கப்பட்ட காணிகள் ஒப்புரவு மூலம் நேரடியாக அடையாளம் காணப்பட்டவை [4] | (1,615,000) | | (1,615,000) |
| கொஞசெவ இல் சொத்து அடையாளம் காணப்படல் [5] | 1,879,000 | | 1,879,000 |
| அரசு சார்பாக காணிக்கு செலுத்தப்பட்ட முற்பணம் அறவிடல், ஒப்புரவு மூலம் நேரடியாக அடையாளம் காணப்பட்டது [6] | (51,500,000) | | (51,500,000) |
| அரச கொடை - ஒப்புரவு மூலம் நேரடியாக அடையாளம் காணப்பட்ட காணி - பிகஞசெவ [7] | 112,000,000 | | 112,000,000 |
| வாடகை அறவிடலின் தாக்கம் ஒப்புரவு மூலம் நேரடியாக அடையாளம் காணப்பட்டது [8] | (42,964,300) | | (42,964,300) |
| **2020 டிஸம்பர் 31ஆம் திகதியன்று மீதி** | **20,911,194,024** | **15,340,693,234** | **36,251,887,258** |

**1**. வரையறுக்கப்பட்ட மரமுந்திரிகை கூட்டுத்தாபனம் எனறு அழைக்கப்படும் கொழும்பு 3 இல அமைந்துள்ள காணிகளென கிடைக்கபபெற வேண்டியதாக இருந்த ரூபா209,600,000.00 தொகையானது 2019 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையிலுள்ள அவதானிப்பின் அடிப்படையில் ஒப்புரவினூடாக பதிவழிக்கப்பட்டது. 2011 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க செயற்பாடு குறைவாகவுள்ள தொழில்முயற்சிகளுக்கு அல்லது குறைவாகப் பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்களுக்கு புத்துயிர் அழித்தல் சட்டத்தின் கீழ் அரசுக்கு பாதீனப்படுத்தப்பட்டு நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு மாற்றப்பட்டது. நகர அபிவிருத்தி அதிகார சபையானது அரச விலைமதிப்பினை அடிப்படையாகக்கொண்டு ரூபா 423,360,000.00 தொகையினை இழப்பீடாகக் கொடுப்பனவு செய்வதற்கு தற்போது இணங்கியுள்ளது. இது அரசுரிமை மூலம் மீள நிறுவப்பட்டது.

**2. திறைசேரிக்கான கொடுக்கல் வாங்கல்கள் நேரடியாக ஒப்புரவு மூலம் அடையாளம் காணப்பட்டது**

2.1 மெகா திட்டங்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகளுக்காக ஏற்பட்ட செலவினம் ஒப்புரவு கணக்கூடாக (ரூபா 50,000.00) நேரடியாக அடையாளம் காணப்பட்டது.

2.2 திறைசேரிக்கான கொடுக்கல் வாங்கல் மீளளிப்பு ஒப்புரவில் அடையாளம் காணப்பட்ட தொகை ரூபா 184,432.00

**3.** இலங்கை அரசு கொழும்பு, பலதக்ஷ மாவத்தையில் அமைந்துள்ள 3 ஏக்கர் 3 றூட் 5 பேர்ச் விஸ்தீரணமுள்ள காணியை ஒரு கலப்பு அபிவிருத்தி திட்டத்திற்காக இமுச க்கு மாற்றியது. இது அரச ஒப்புரவு ஊடாக நேரடியாக அடையாளம் காணப்பட்டது.

**4.** 2011 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க செயற்பாடு குறைவாகவுள்ள தொழில்முயற்சிகளுக்கு அல்லது குறைவாகப் பயன்படுத்துகின்ற சொத்துக்களுக்கு புத்துயிர் அழித்தல் சட்டத்தின் கீழ் அரசுக்கு உரித்தாக்கப்பட்ட காணி அரசுரிமை மூலம் நேரடியாக அடையாளம் காணப்பட்டது.

**5.** நேரடியாக அடையாளம் காணக்கூடிய நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் சேர்க்கப்படாத சொத்துக்கள். அரச விலை மதிப்பீட்டின் அடிப்படையில் கட்டடத்தின் பெறுமதி இற்றைப்படுத்தப்பட்டது.

**6.** அரசு சார்பாக பிங்கிரியவில் அமைந்துள்ள காணி கொள்ளலுக்காக குளியாபிட்டிய பிரதேச செயலாளருக்கு சபை முற்பணம் செலுத்தியுள்ளது. இந்தத் தொகை பங்களிப்பிலிருந்து திரட்டிய நிதி 2020 க்கு மீளப்பெறப்பட்டது.

**7**. இலங்கை அரசு ஒரு ஏற்றுமதி செயலாக்க வலயம் தாபிப்பதற்காக பிங்கிரியவில் அமைந்துள்ள 439 ஏக்கர் 6 றூட் 12.67 பேர்ச் விஸ்தீரணமுள்ள காணியை மாற்றியுள்ளது. காணியின் பெறுமதி அரசுடமை ஊடாக அரச கொடையாக நேரடியாக அடையாளம் காணப்பட்டது.

**8.** கைத்தொழில் ஏற்றுமதி மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அமைச்சு மற்றும் அபிவிருத்தி திட்டமிடல் மற்றும் வர்த்தக அமைச்சிடமிருந்து கிடைக்கவேண்டிய நிலுவை வாடகை அரசுடமையிலிருந்து நேரடியாகக் கழிக்கப்பட்டது. சபை தளம் 25 மற்றும் தளம் 27 ஐ நிரல் அமைச்சிற்கு குத்தகைக்கு விட்டுள்ளது.

**பக்கம்** 46-67 **வரை தயாரிக்கப்பட்டுள்ள "நிதி கூற்றுகளுக்கான குறிப்புக்கள்" நிதி கூற்றுகளின் அத்தியாவசியப் பகுதியாகும்.**

இலங்கை முதலீட்டுச் சபை

## காசுப் பாய்ச்சல் கூற்று

| டிஸம்பர் 31 ல் முடிவடைந்த ஆண்டுக்கானது | 2020<br>ரூபா(மிலி.) | 2019<br>ரூபா(மிலி.) |
|---|---|---|
| **செயற்பாட்டு தொழிற்பாடுகளிலிருந்து காசுப் பாய்ச்சல்கள்** | | |
| **செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட காசு (குறிப்பு 24)** | **625.78** | **924.84** |
| செலுத்தப்பட்ட வருமான வரி | (92.46) | (121.65) |
| ஓய்வூதிய பிரதிலாப கடப்பாட்டுக் கொடுப்பனவுகள் | (75.57) | (37.94) |
| பணிக்கொடை மீள் சீராக்கல் | - | 1.27 |
| பெற்றுக்கொண்ட ஒத்திவைக்கப்பட்ட வருமானம் | 300.90 | 408.75 |
| பெற்றுக்கொண்ட காணி ஒதுக்கீடு | 31.21 | - |
| **செயற்பாட்டு தொழிற்பாடுகளிலிருந்து தேறிய காசு உட்பாய்ச்சல்/(வெளிப்பாய்ச்சல்)** | **789.86** | **1,175.27** |
| **முதலிடும் தொழிற்பாடுகளிலிருந்து காசுப் பாய்ச்சல்** | | |
| பெற்றுக்கொண்ட முதலீட்டு வருமானம் | 347.97 | 411.13 |
| பணியாளர் கடனும், நிதிசார் உதவியும் | 11.12 | (43.08) |
| நிலையான சொத்துக்கள் கொள்வனவு | (45.92) | (153.55) |
| நிலையான சொத்துக்கள் விற்பனையிலிருந்து வரும்படி | 19.06 | 18.94 |
| அமுலிலுள்ள மூலதனப் பணிகள் | (570.60) | (791.58) |
| ஒத்திவைக்கப்பட்ட செலவினம் | (3.03) | (0.31) |
| **முதலிடும் தொழிற்பாடுகளிலிருந்து தேறிய காசு உட்பாய்ச்சல்/(வெளிப்பாய்ச்சல்)** | **(241.39)** | **(558.45)** |
| **நிதியிடல் தொழிற்பாடுகளிலிருந்து காசுப் பாய்ச்சல்** | | |
| செலுத்தப்பட்ட குத்தகை தவணைக் கட்டணம் | (42.26) | (29.45) |
| திறைசேரிக்கு நிதியத்தை மாற்றல் | (159.46) | - |
| மீளளிப்புகள் றாடாஎல ஹொஏசெவ RADA Ela HEPZ | 0.18 | - |
| அளவை கட்டணம் முற்பணம் | (0.05) | - |
| மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் இழப்பீடு | 60.00 | - |
| **நிதியிடல் செயற்பாடுகளிலிருந்து தேறிய காசுப் பாய்ச்சல்/(வெளிப்பாய்ச்சல்)** | **(141.58)** | **(29.45)** |
| காசும், காசுக்கு சமமானவற்றிலும் தேறிய அதிகரிப்பு/(குறைவு) | 406.89 | 587.37 |
| வருட ஆரம்பத்தில் காசும், காசுக்கு சமமானவையும் | 4,338.22 | 3,750.85 |
| வருட இறுதியில் காசும் காசுக்கு சமமானவையும் | **4,745.11** | **4,338.22** |

# இலங்கை முதலீட்டுச் சபை

## நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

### *1. அறிக்கைப்படுத்தும் நிறுவனம்*

இலங்கை முதலீட்டுச் சபை, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டம் 1978 இன் இல. 4 இன் கீழ் ஸ்தாபிக்கப்பட்டது. இந்த நிறுவனத்தின் பதிவு அலுவலகமும், பிரதான அலுவலகமும் கொழும்பு 1 எசிலன் சதுக்கத்தில் உள்ள உலக வர்த்தக மையத்தின் மேற்குக் கோபுரத்தில் அமைந்துள்ளது.

### *2. தயாரித்தலுக்கான அடிப்படைகள்*

### *2.1 இணக்கக் கூற்று*

சர்வதேச கணக்கீட்டுத் தரச் சபையினால் வெளியிடப்பட்ட சர்வதேச நிதி அறிக்கைப்படுத்தல் தரத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட இலங்கைக் கணக்கீட்டுத் தரங்களுக்கு (SLFRS) அமைய நிதி நிலைமைக் கூற்று, விரிவான வருமானம், ஒப்புரவில் மாற்றங்கள், காசுப் பாய்ச்சல் மற்றும் குறிப்புக்கள் சபையின் குறிப்பிடப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளின் சுருக்கத்துடன் தயாரிக்கப்பட்டுள்ளன.

### *2.2 மதிப்பீடுகள், நியாயப்படுத்துதல் மற்றும் ஊகங்களை உபயோகித்தல்*

சபையின் நிதிசார் கூற்று தயாரிக்கப்படும்போது வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் அசாதாரண பொறுப்புக்களை வெளிப்படுத்துதல் என்பவற்றில் அந்த அறிக்கையிடப்பட்ட திகதியில் அறிக்கையிடப்பட்ட தொகையில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றவற்றிற்கு முகாமைத்துவம் நியாயப்படுத்துதல், மதிப்பிடுதல் மற்றும் ஊகங்களை மேற்கொள்ள வேண்டும். இந்த மதிப்பீடுகளும், அடிப்படை ஊகங்களும் தொடர்ந்து மீளாய்வு செய்யப்படுகின்றன. எவ்வாறாயினும், இந்த ஊகங்களும், மதிப்பீடுகளும் நிச்சயமில்லாததால் எதிர்காலத்தில் பாதிக்கப்பட்ட சொத்துக்களில் அல்லது பொறுப்புக்களில் கொண்டுசெல்லப்பட்ட தொகையில் பொருள் சீராக்கல் மேற்கொள்ளவேண்டிய தேவை எற்படலாம்.

### *2.3 தொடர்ந்து இயங்கிவரும் நிறுவனம்*

நிதிசார் கூற்றைத் தயாரிக்கும்போது சபை தொடர்ந்தும் இயங்குகின்ற ஒரு நிறுவனமாக இருக்கின்ற வல்லமை கொண்டதாக இருப்பதாக முகாமைத்துவம் மதிப்பீடு செய்துள்ளது. சபை தொடர்ந்தும் செயற்பாட்டு நடவடிக்கைகளைத் தொடர்வதற்குப் போதுமான வளங்கள் சபையிடம் உள்ளதென்ற நியாயமான எதிர்பார்ப்பைக் கொண்டுள்ளது. எதிர்காலத்தையிட்டு கிடைத்த தகவல்கள் அனைத்தையும் கருத்தில் கொள்ளும்போது ஒழிக்கவேண்டிய அல்லது செயற்பாடுகளை நிறுத்தவேண்டிய தேவை எதனையும் சபை எதிர்பார்க்கவில்லை. அதற்கேற்ப சபை தொடர்ந்து இயங்கிவரும் நிறுவனம் என்ற அடிப்படையில் நிதிசார் கூற்றுக்களைத் தயாரிக்கிறது.

### *2.4 பாவனையிலுள்ள மற்றும் நிதிசார் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நாணயம்*

சபையின் பாவனையிலுள்ள நிதி இலங்கை ரூபாவாகத் தீர்மானிக்கப்பட்டதுடன், நிதிசார் கூற்றுக்களும் இலங்கை ரூபாவில் தயாரிக்கப்பட்டுள்ளன.

## *3. குறிப்பிடப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள்*

### 3.1 *நிதிச் சொத்துக்கள்*

சபை அதன் நிதிச் சொத்துக்களை கடன்கள் மற்றும் கிடைக்கவேண்டியவையென வகைப்படுத்தியதுடன் நிதிச் சொத்துக்கள் முதலீட்டில் நியாயமான பெறுமதியில் அளவிடப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் அடையாளம் காணப்பட்டபோது இந்த வகைப்படுத்தல் முகாமைத்துவத்தினால் தீர்மானிக்கப்பட்டதுடன், இந்த முதலீடு எந்தத் தேவைக்காக மேற்கொள்ளப்பட்டு, பெற்றுக்கொள்ளப்பட்டது என்பதுடன், அதன் ஒப்பந்த காசுப் பாய்ச்சல் குணாதிசயங்களிலும் தங்கியுள்ளது.

**(அ) *வகைப்படுத்தல்***

(i) *கடன்களும், கிடைக்கவேண்டியவையும்*

கடன்களும், கிடைக்கவேண்டியவையும் ஒரு தீவிரமான சந்தையில் தெரிவிக்கப்படாத நிலையான அல்லது தீர்மானிக்கப்படும் கொடுப்பனவுடனான ஒரு மூலத்திலிருந்து பெறப்படாத நிதிச் சொத்துக்களாகும். பொதுவான கொடுக்கல் வாங்கல்களில் ஏற்படும் கிடைக்கவேண்டியவையும் இவ்வகையின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன், அவை இழப்பீடுகளுக்காக மீளாய்வு செய்யப்படுகின்றன.

(ii) *நியாயமான பெறுமதியில் மதிப்பிடப்பட்ட நிதிச் சொத்துக்கள்(முதிர்வடையும்வரை வைத்திருக்கும் நிதிச் சொத்துக்கள்)*

நியாயமான பெறுமதியில் மதிப்பிடப்பட்ட நிதிச் சொத்துக்களாவன ஒரு மூலத்திலிருந்து பெறப்படாததும், நிலையான அல்லது தீர்மானிக்கக்கூடிய கொடுப்பனவுடனானதும், நிலையான முதிர்வுகாலத்தைக் கொண்டிருப்பதுடன், சபையின் முகாமைத்துவம் அவற்றை முதிர்வடையும்வரை வைத்திருக்கமுடியுமென்ற சார்பான நோக்கத்தையும், வல்லமையையும் கொண்டுள்ளவையாகும். இந்த நிதிச் சொத்துக்கள் அடையாளம் காணப்பட்டு, வருமானக் கூற்றில் நியாயமான பெறுமதியில் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**(ஆ) *இழப்பீடுகள்***

இழப்பீடுகள் பற்றிய அறிகுறிகள் ஏதாவது இருக்கின்றனவாவென ஒவ்வொரு ஐந்தொகைத் தினத்திலும் நிதிச் சொத்துக்கள் மீளாய்வு செய்யப்படும். அவ்வாறான அறிகுறி ஏதும் இருப்பின், சொத்தின் அறவிடப்படக்கூடிய தொகை மதிப்பிடப்படும்.

இழப்பீட்டு நட்டங்களானது சொத்தின் மேற்கொண்டுசெல்லும் அளவு அல்லது அதன் காசு உற்பத்தி செய்யும் அலகுகள் அதன் அறவிடப்படக்கூடிய தொகையைத் தாண்டிச் செல்லும்போது அடையாளம் காணப்படுகிறது. இழப்பீட்டு நட்டங்கள் வருமானக் கூற்றில் அடையாளம் காணப்படுகின்றன.

**(இ) *மீள் அடையாளம் காணல்***

ஒவ்வொரு அறிக்கைப்படுத்தல் திகதியிலும், முன்னரான காலப்பகுதியில் அடையாளம் காணப்பட்ட இழப்பீட்டு நட்டங்கள் குறைவடைந்துள்ளனவா அல்லது அகன்றுவிட்டனவாவென்ற அறிகுறிகளுக்காக மதிப்பிடப்படுகிறது. அறவிடப்படக்கூடிய தொகையைத் தீர்மானிப்பதற்கு மதிப்பீடுகளில் ஏதாவது மாற்றம் இருப்பின், இழப்பீட்டு நட்டங்கள் மீள் அடையாளம் காணப்படும்.

## 3.2 ஆதனம், பொறித்தொகுதி மற்றம் சாதனம்

### *(அ) அடையாளம் காணுதலும், அளவீடும்*

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் சாதனம் என்பன அதன் கிரயத்திலிருந்து திரண்ட தேய்மானம் மற்றும் ஏதாவது திரண்ட இழப்பீட்டு நட்டங்கள் கழித்து காட்டப்பட்டுள்ளன. கிரயம் சொத்து கொள்வனவிற்கு நேரடியான செலவினமாகக் காட்டப்படுவன அடங்கலாகும். சுயமாகக் காட்டப்பட்ட சொத்துக்களின் கிரயம் பொருட்களின் கிரயம், நேரடி உழைப்பு, மற்றும் வேறு ஏதாவது கிரயங்கள் அந்த சொத்து என்ன தேவைக்கானதோ அதனை இயங்கும் நிலைக்குக் கொண்டுவருவதற்கான ஏனைய நேரடி கிரயங்கள், கழற்றுவதற்கான கிரயம், விடயங்களை அகற்றுவதற்கான கிரயம், அவை அமைவிடத்தை பழைய நிலைக்குக் கொண்டுவருதல் என்பன அடங்கலாகும்.

மீள்மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்களுக்கு SLFRS 1 இன்படி, ஆதனம், பொறித்தொகுதி மற்றும் சாதனம் மதிப்பீடு செய்யும்போது அதன் மேற்கொண்டு செல்லப்பட்ட பெறுமதியில் 2011 ஜனவரி 01 ஆம் திகதியன்று திரண்ட தேய்மானத்தை கழித்து, வருகின்ற தொகையே 2011 ஜனவரி 01 ஆம் திகதியன்று பெறுமதியாகக் கருதப்பட்டுவருகிறது.

### *(ஆ) தேய்மானம்*

ஆதனம், பொறித் தொகுதி மற்றும் சாதனத்தின் சகல விடயங்களுக்குமான தேய்மானம் கிரயம்/மதிப்பீடு நேர் கோட்டு முறைமையின் அடிப்படையில் கணிக்கப்பட்டு, வருமானக் கூற்றில் அடையாளம் காணப்படுகிறது. நிலையான சொத்துக்களுக்கான தேய்மானம் அவை பாவனைக்குக் கிடைக்கக்கூடியபோது, கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டில் அறவிடப்படுகிறது. ஆதனம், பொறித் தொகுதி மற்றும் சாதனம் என்பனவற்றிற்கு வருடந்தோறும் அவற்றின் பயன்பாட்டுக் காலத்தில் தேய்மானம் மேற்கொள்ளப்படுகிறது. பராதீனப்படுத்தப்படாத காணிகளுக்கு தேய்மானம் மேற்கொள்ளப்படுவதில்லை.

| ***சொத்துக்களின் வகை*** | ***வருடாந்த தேய்மான வீதம்*** | ***காலம் (ஆண்டுகள்)*** |
|---|---|---|
| கட்டடங்களும் அமைப்புகளும் | 5 | 20 |
| பொறித்தொகுதி, இயந்திரங்கள் | 10 | 10 |
| இணைப்பும் பொருத்துதலும் | 10 | 10 |
| அலுவலக தளபாடம்,உபகரணம் | 10 | 10 |
| கணனிகள் | 33.33 | 3 |
| மோட்டார் வாகனங்கள் | 20 | 5 |

### *(இ) மீள் அடையாளம் காணல்*

ஆதனம் மற்றும் உபகரண விடயங்கள் வெளியேற்றப்படும்போது அல்லது அதன் பயன்பாட்டிலிருந்து எதிர்காலத்தில் எந்த பொருளாதார அனுகூலமும் எதிர்பார்க்கப்படாதவிடத்து, மீள் அடையாளம் காணப்படுகின்றன. சொத்து, பொறித் தொகுதி, சாதனம் ஒன்றினை மீள் அடையாளம் காணுதலினால் ஏற்படும் இலாபம் அல்லது நட்டம் அதனை விற்று வரும் தொகைக்கும், அந்தச் சொத்தை மேற்கொண்டு

## நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் (தொடர்ச்சி)

செல்லும் தொகைக்குமிடையிலான வித்தியாசமாகத் தீர்மானிக்கப்படுவதுடன், இது வருமானக் கூற்றில் அடையாளம் காணப்பட்டுள்ளது.

### *(ஈ) அடுத்தடுத்த செலவினம்*

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் சாதனத்தின் விடயம் ஒன்றை மாற்றிடல், மேம்படுத்தல், மற்றும் அதன் பாகமொன்றை நிர்மாணித்தலுக்கான கிரயமானது அந்தப் பாகத்தில் அடங்கியுள்ள எதிர்கால பொருளாதார நன்மைகள் சபைக்கு உள்வருவதும், அந்தக் கிரயத்தை நம்பத்தகுந்த விதத்தில் அளவிடக்கூடியதுமாக இருப்பதும் சாத்தியமானால் அந்தத் தொகையை மேற்கொண்டு செல்வதாக அடையாளம் காணப்பட்டுள்ளது. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் சாதனத்தின் நாளாந்த சேவைகளுக்கான கிரயங்கள் வருமான மற்றும் ஏனைய விரிவான வருமான கூற்றில் ஏற்பட்டதாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

### *(உ)தற்போதுள்ள மூலதன நடைமுறை வேலை*

இவ்வாண்டில் ஏற்பட்ட மூலதன செலவினங்களில் நிதிசார் நிலைமைக் கூற்று தினத்தில் பூரணப்படுத்தப்படாதவை தற்போதுள்ள மூலதன நடைமுறை வேலையாகக் காட்டப்பட்டுள்ளன. இவை ஏதாவது திரண்ட இழப்பீட்டு நட்டங்களைக் கிரயத்திலிருந்து கழித்துக் கூறப்பட்டுள்ளன. தற்போதுள்ள மூலதன நடைமுறை வேலைகளில் முகாமைத்துவத்தின் நோக்கத்திற்கமைய செயற்படுத்தக்கூடியவாறும், குறித்த அமைவிடத்திலும், தேவையான நிபந்தனைகளுக்கு அமைவாகவும் இருக்கக்கூடியதான ஆதனம், பொறித்தொகுதி மற்றும் சாதனத்துடன் மெகா திட்டங்களுக்காக தள்ளிப்போடப்பட்ட மற்றும் ஏற்பட்ட செலவினங்கள் என்பன அதற்குரிய சொத்துக்களின் வகைக்கு மாற்றப்பட்டுள்ளது.

### *(ஊ) குத்தகை சொத்துக்கள்*

நிதிசார் பொறுப்புக்களின் கீழ் பெறப்பட்ட சொத்துக்கள் மூலதனமாக்கப்பட்டு, குத்தகைக்கு வழங்கப்பட்ட மோட்டார் வாகனங்கள் என்ற வகையின் கீழ் அதேயளவு நிதிசார் பொறுப்பாக அடையாளம் காணப்பட்டு, சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளன. நிதிக் குத்தகையின் கீழுள்ள சொத்துக்கள் அவை பயன்படுத்தப்படும் காலம் பூராவும் தேய்மானத்திற்கு உட்படுத்தப்படுகின்றன.

### *(எ) கட்டமைப்புக்கள்*

ஏழு பிரதான உப வகுதிகளின் கீழ் கட்டமைப்புகளின் நியாயமான பெறுமதிகள் மதிப்பிடப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிரதான உப வகுதியுடனும் தொடர்புபட்ட சகல விடயங்களும், அங்கங்களும் ஒரு அலகின் பகுதியாகுவதாகக் கருதப்படுகின்றன.

## 3.3 *(அ) முதலீட்டுச் சொத்துக்கள்*

முதலீட்டுச் சொத்துக்கள் அச் சொத்துக்களை வகைப்படுத்தும் தினத்தில் காணப்படும் பெறுமதியில் முதலீட்டுச் சொத்துக்களின் கீழ் கிரயத்தில் காட்டப்பட்டுள்ளன.

முதலீட்டுச் சொத்துக்கள் தொடர்பான எதிர்கால பொருளாதார அனுகூலங்கள் சபைக்குக் கிடைக்கக்கூடியதானது சாத்தியமானாலும், கிரயமானது நம்பத்தகுந்த முறையில் அளவிடமுடியுமானதாக இருக்குமெனில் அத்தகையவை முதலீட்டுச் சொத்துக்களாக அடையாளம் காணப்படும். வாடகை வருமானத்தை உழைப்பதற்காக வைத்திருக்கும் சொத்துக்களானது முதலீட்டுச் சொத்துக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

### *(ஆ) தேய்மானம் (கடன்தீர் நிதி மூலமாக கடன் குறைப்பு)*

காணி தவிர முதலீட்டுச் சொத்துக்களின் தேய்மானம் நேர்கோட்டு அடிப்படையில் கிரயம்/ முதலீட்டுச் சொத்துக்களின் மதிப்பீட்டில் கணிக்கப்படும். முதலீட்டுச் சொத்துக்களுக்கான

தேய்மானம் வருடந்தோறும் வருமாறு அவற்றின் பயன்பாட்டுக் காலம்வரைக்கும் மேற்கொள்ளப்பட்டது.

| சொத்துக்களின் வகை | வருடாந்த தேய்மான வீதம் | காலப்பகுதி (ஆண்டுகள்) |
|---|---|---|
| கட்டடங்கள் | 5 | 20 |

**3.4** ***பொருட்பதிவேடுகள்***

சகல பொருட்பதிவேடுகளும் குறைவான ஆகுசெலவில் அல்லது தேறிய பெறக்கூடிய பெறுமதியில் மதிப்பிடப்பட்டுள்ளன. முதல் உள்வரல் முதல் வெளியேறல் (FIFO) அடிப்படையில் கிரயம் தீர்மானிக்கப்படுகிறது.

**3.5** ***ஏனைய சொத்துக்கள்***

ஏனைய கடன்படுனர், கிடைக்கவேண்டியவை, முற்பணங்கள், வைப்புக்கள், முற்செலுத்தப்பட்டவை என்பன ஏனைய சொத்துக்களில் அடங்கும்.

(அ) *முற்பணங்கள், வைப்புக்கள், முற்செலுத்தப்பட்ட செலவினங்கள்*

ஒரு நிதியாண்டை விடக் கூடுதலான காலத்திற்கு அனுகூலமானதாக அல்லது சம்பந்தப்பட்டதாகக் கருதப்படும் செலவினம் முற்பணங்கள், வைப்புகள், மற்றும் முற்செலுத்தப்பட்ட செலவினங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. அத்தகைய செலவினம் கால விகிதாசார அடிப்படையில் அவை எவ்வளவு காலத்திற்கானதோ அதற்கேற்ப பதிவழிக்கப்படும்.

(ஆ)*ஏனைய கடன்படுனர்*

ஏனைய கடன்படுனர் கிரயத்தில் இழப்பீட்டு நட்டம் கழித்து, அடையாளம் காணப்படுவர். ஏனைய பெற்றுக்கொள்ள வேண்டியவையின் கீழ் உள்ள மொத்தம் ரூபா 507,650.00 தலைமை அலுவலகத்தில் காசு குறைபாடாகக் காட்டப்பட்டுள்ளது. நீதிமன்ற வழக்கு பூர்த்தியாகாத நிலையிலுள்ளது.

**3.6** ***காசும், காசுக்கு சமமானவையும்***

காசும், காசுக்கு சமமானவையும் கையிருப்புக் காசு மற்றும் குறுகிய கால, துரித கதியில் மாற்றக்கூடிய மூலதனங்களை உள்ளடக்கியதாகும். இவை வேண்டிய நேரத்தில் உடனடியாக வேண்டிய அளவு மாற்றக்கூடியவையும், பெறுமதியில் எந்த குறிப்பிடப்பட்ட தீங்கு எதனையும் விளைவிக்காதவையுமாகும். குறுகிய கால காசு தேவையைப் பூர்த்தி செய்வதற்காக இவை வைத்திருக்கப்படுகின்றன.

**3.7** ***காசுப் பாய்ச்சல் கூற்று***

காசுப் பாய்ச்சல் கூற்று சம்பந்தமாக இலங்கை கணக்கீட்டு தரம் இல.7 (LKAS) க்கு அமைய மறைமுகமான வழிமுறைகளைப் பயன்படுத்தி, காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது.

**3.8 ஊழியர் அனுகூலங்கள்**

*(அ) வரையறுக்கப்பட்ட பங்களிப்பு திட்டங்கள்*

முறைப்படியான நியதிச் சட்டங்களுக்கும், பிரமாணங்களுக்கும் அமைய ஊழியர்கள் ஊழியர் சேமலாப நிதி (EPF) பங்களிப்பிற்கும், ஊழியர் நம்பிக்கை நிதி (ETF)

பங்களிப்பிற்கும் தகுதியுடையவர்களாவார்கள். சபை, ஊழியர்களின் மொத்த வரும்படியின் நிலையான பங்களிப்புகளை ஊழியர் சேமலாப நிதிக்கும், ஊழியர் நம்பிக்கை நிதிக்கும் செலுத்துகிறது. மேலும் தொகையினைச் செலுத்தவேண்டுமென்று சட்டரீதியானதோ அல்லது ஆக்கபூர்வமான கடப்பாடோ எதுவும் இருக்காது.

*(ஆ) வரையறுக்கப்பட்ட அனுகூல திட்டங்கள்*

வரையறுக்கப்பட்ட அனுகூல திட்டங்கள் என்பவை வரையறுக்கப்பட்ட பங்களிப்பு திட்டங்கள் தவிர்ந்த தொழிலுக்குப் பிற்பாடான தொழிற்பாடுகளாகும். 1983 ஆம் ஆண்டின் பணிக்கொடை கொடுப்பனவு சட்ட இல.12 நியதியின்படி சபை பணிக்கொடை செலுத்தவேண்டும். இச் சட்டத்தின் கீழ் ஆயுட்கணக்கர் மதிப்பீட்டின் அடிப்படையில் கடப்பாட்டிற்கான ஏற்பாடு தீர்மானிக்கப்படுகிறது.

## 3.9 *பொறுப்புக்களும், ஏற்பாடுகளும்*

கடந்தகால சம்பவங்களின் பயனாக கணக்குத் தீர்த்தலால் பொருளாதார அனுகூலங்கள் கொண்ட வளங்கள் வெளிச்செல்வதற்கு வழிவகுப்பதாக எதிர்பார்க்கப்படுவதால் தற்போதைய சட்டரீதியான /ஆக்கபூர்வமான கடப்பாடுகள் காணப்படும்போது நிதிசார் நிலைமைக் கூற்றில் பொறுப்புக்கள் மற்றும் ஏற்பாடுகள் அடையாளம் காணப்படுகின்றன.

கடன்படுனரின் கோரிக்கைக்கு அமைய செலுத்தவேண்டிய கடப்பாடுகள் அல்லது நிதிசார் நிலைமைக் கூற்று தினத்திலிருந்து ஒரு வருடத்திற்குள் செலுத்தவேண்டிய பொறுப்புக்கள் நிதிசார் நிலைமைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்புக்களாகக் கணிக்கப்படுகின்றன. நிதிசார் நிலைமைக் கூற்று தினத்திலிருந்து ஒரு வருடத்திற்குப் பின்னர் செலுத்தவேண்டிய பொறுப்புக்கள் நிதிசார் நிலைமைக் கூற்றில் நடைமுறையல்லாத பொறுப்புக்களாகக் கணிக்கப்படுகின்றன.

***ஏனைய பொறுப்புக்கள்***

